விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 152 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 05 ஞாயிற்றுக்கிழமை (19.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# கண்ணீரில் நனைந்தது முள்ளிவாய்க்கால் முற்றம்




## தாயகத்திலும் புலத்திலும் நினைவேந்தல்கள் உயிரிழந்த உறவுகளுக்கு சுடரேற்றி அஞ்சலி

(முள்ளிவாய்க்கால்)

இறுதிப் போரில் அரச படைகளால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்ட தமிழினப் படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நேற்று பேரெழுச்சியுடன் நடைபெற்றது.



(19ஆம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாகரனுக்கு டென்மார்க்கில் வீரவணக்கம்



(கோபன்ஹேகன்)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வு நேற்று டென் மார்க்கில் நடைபெற்றது. 19

## நீதிக்காக 15 வருடங்கள் காத்திருக்கும் உறவுகள்

### மண்டியிட்டு அஞ்சலி செலுத்திய பின் முள்ளிவாய்க்காலில் மன்னிப்புச் சபையின் செயலாளர்

(முள்ளிவாய்க்கால்)

யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்தும் நீதிக்காக இன்றும் முள்ளிவாய்க்காலில் உறவுகள் காத்திருப்ப 19



### கெடுபிடிகளுக்கு மத்தியில்

## கொழும்பு வெள்ளவத்தையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



19

## தமிழர்களுடைய சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும்

### முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் வலியுறுத்து

(முல்லைத்தீவு)

தமிழர்கள் ஒருதேச அங்கீகாரத்துக்குரியவர்கள் என்பதோடு அவர்களின் தனித்துவமான இறையாண்மையினதும் ஒருபோதும் பராதீனப்படுத்த இயலாத சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் சுயாட்சியை அங்கீகரிக்க வேண்டும் என்று முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. 04

## புலிகள் இருந்திருந்தால் துயரம் நேர்ந்திருக்காது

### முள்ளிவாய்க்கால் மண்ணில் தாயொருவர் கண்ணீர்

(முல்லைத்தீவு)

விடுதலைப் புலிகள் இருந்திருந்தால் இப்படியான துயரங்கள் நேர்ந்திருக்காது என்று தாயொருவர் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

இறுதிப் போரில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூரும் வகையில் முள்ளிவாய்க்கால் 19

### கிழக்குப் பல்கலையில்

## பொலிஸார் அட்டகாசம்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வைப் பொலிஸார் தடுத்து 19

### வவுனியா நகர சபை மைதானத்தில்

## போரில் உயிரிழந்த மூவின மக்களுக்கும் அஞ்சலி



(வவுனியா)

வவுனியாவில்போரால் உயிரிழந்தவர்களுக்கு மூவின மக்களும் இணைந்து அஞ்சலி நிகழ்வு ஒன்றினை நேற்று 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி கலாசாலை வீதியில் 1 1/2 பரப்பும் கோண்டாவில் இராமகிருஸ்ண வீதியில் 1 1/2 பரப்பும் விற்பனைக்குண்டு. (814)

077 703 7058

## வேலையாட்கள் தேவை

பொருட்களை விநியோகம் செய்யும் ஸ்தாபனத்திற்கு கணக்குகள் சரிபார்க்கவும் இருப்புகள் சரிபார்க்கவும் முழு நேர / பகுதி நேர வேலைக்கு ஆட்கள் தேவை. (785)

தொடர்புகளுக்கு

0777 240 612


## 400 கிலோ கிராம் போதைப்பொருள் அழிப்பு

(புத்தளம்)

அண்மைக் காலத்தில் வழக்குகள் நிறைவடைந்த சுமார் 400 கிலோகிராம் போதைப்பொருட்கள் நேற்று (18) பிற்பகல் எரித்து அழிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு சொந்தமான புத்தளம் வனாத்தவில்லு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட விசேட அடுப்பில் குறித்த போதைப்பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன. (ம-7.10)


## லொத்தர் ரிக்கட் விற்பனையாளர் தேவை

கொக்குவில், கோண்டாவில், இணுவில், தெல்லிப்பளை ஆகிய இடங்களுக்கு விற்பனையாளர் தேவை. (787)

077 122 8841

No. 357, KKS ROAD, JAFFNA.

## வீடு விற்பனைக்கு

யாழ் சுண்டிக்குளி சந்திக்கு அருகாமையில் குருசோ வீதியில் 3 பரப்பு காணியில் கிணறு, வாகனங்கள் நிறுத்தும் இடவசதி மற்றும் பயன்தரு மரங்களுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. (801)

தொடர்புகளுக்கு

077 116 9636

## வரவேற்பாளர் தேவை

நெல்லியடியில் இயங்கிவரும் பற்சிகிச்சை நிலையத்திற்கு பெண் வரவேற்பாளர் தேவை. கணனி மற்றும் கணக்கு அறிவு உள்ளவர் விரும்பத்தக்கது.

(பிற்பகல் 4.00 இற்கு நேரில் வரவும்)

தொடர்புகளுக்கு

021 - 226 2888

## வேலையாட்கள் தேவை

ஆவரங்கால் பகுதியில் செயல்படும் வியாபார நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

- **உதவியாளர்கள் தேவை**

பொருட்களை விநியோகம் செய்யும் வாகனத்திற்கு உதவியாளர்/ பண வசூலிப்பாளர் தேவை (25-45 வயதிற்கு உட்பட்ட).

- **வாகன ஓட்டுனர்கள் தேவை**

விநியோகம் செய்யும் வாகனத்திற்கு AD வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள சாரதிகள் தேவை. (40 வயதிற்கு மேல்)

ஆவரங்கால் பகுதிக்கு அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் : காலை 10 மணிமுதல் மாலை 4 மணி வரை. (784)

தொடர்பு எண்: 077 009 0189

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## மெட்டி ஒலி திருமண சேவை

- ஜரோப்பாவிலுள்ள சூரிய செவ் மணமகனுக்கு மணமகள் தேவை.
- பிரான்ஸில் வசிக்கும் விசா இல்லாத மணமகன் தேவை. (800)

076 475 2219

077 900 7091

## காணி விற்பனைக்கு

யாழ் வட்டுக்கோட்டை மாவடி சந்திக்கருகில் வட்டுக்கோட்டை - தெல்லிப்பளை பிரதான வீதியில் குடியிருப்புக்கேற்ற 9 பரப்பு காணி பயன்தரு மரங்கள் மற்றும் பெரும் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. (811)

077 116 9636

077 775 0308

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதிக்கு அருகாமையில் 4 பரப்பு காணியும், 4 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தொடர்பு கொள்ள தேவையில்லை. (775)

தொடர்புகளுக்கு:

077 3686 186

## லங்கா மஹால் பிறைவேட் லிமிட்ட்

(உள்நாட்டு வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை)

### வேலையாள் தேவை (ஆண்,பெண்)

A/L தகைமையுடைய (கணினி அறிவு அடிப்படை) வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (819)

65, 2nd cross street, Vavuniya.

077 839 3974

## விமலம் திருமண சேவை

யாழ்/ கனடா சர்வதேச சேவை தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன் / மணமகள் தேவையெனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். கனடா, லண்டன், சுவிஸ், பிரான்ஸ் மணமகன் / மணமகள் உள்ளன. (779)

+1437 244 6737, +1647 657 1347

(கனடா) 077 240 9276 தாயகம்


## வேலைக்கு பெண் ஊழியர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணி புரிவதற்கு கணனி அறிவுடைய பெண் ஊழியர்கள் தேவை. (815)

001 437 344 4959

[(கனடா) Whats app]


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 07 . 11 . 1982

ஆண்டவன் அடியில் 19 . 05 . 2022

## அமரர் தங்கவேலாயுதம் மயூரன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் -II)

திதி : வைகாசி அபரபக்க சதுர்த்தி 27.05.2024

ஓரிரண்டு ஆண்டுகள் ஆனதப்பா உங்கள் குரல் கேட்டு!
இனி எங்கு காண்போம் அப்பா உங்களின் அந்த தோரணையை
நீங்கள் இல்லாத வீடும் நீங்கள் இல்லாத சபையும்
கூறும் உங்கள் தனித்துவத்தை
இறுதி மூச்சு உள்ளவரை எமக்காய் இருந்த எம்
அப்பா-எம் மூச்சில் கலந்து இன்று வருடங்கள் இரண்டு

அப்பா, மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள், மருமக்கள், பெறாமக்கள், மைத்துனர், அத்தான்

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 19 . 11 . 1954

ஆண்டவன் அடியில் 30 . 06 . 2021

## அமரர் தங்கவேலாயுதம் தவமணிதேவி


திதி : ஆனி அமரபக்க ஷஷ்டி 27.06.2024

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் எம்முன்னே
உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும் - அம்மா
ஆண்டு மூன்று ஆனாலும் உம் நினைவுகள் அழியவில்லை - அம்மா
மண் விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கிச்
சென்றாலும் கண் விட்டு மறையாமல்
கனகாலம் எம்முடன் இருப்பீர்கள் - அம்மா

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், சகோதரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் பேரவலம் நெக்குருகி கதறிய உறவுகள்




















(படங்கள்: சதீஸ், வசந்தரூபன், தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நள்ளிரவில் ஒரு திக்... திக்... திக்...

# ‘பத்தல’ சென்னைக்கு 10 ரன் ‘பத்தல’ ‘தேறல’ இரசிகர்கள் மனசு ‘தேறல’

ஐ.பி.எல்., தொடரில் இருந்து வெளியேறியது நடப்பு சம்பியன் சென்னை அணி. நேற்று பெங்களூருவிடம் 27 ஓட்டங்களில் தோற்று, "பிளே ஓப்" வாய்ப்பை இழந்தது.

பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் நடந்த ஐ.பி.எல்., போட்டியில் நடப்பு சாம்பியன் சென்னை, பெங்களூரு அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில்வென்ற சென்னை அணியின் தலைவர் ருதுராஜ், களத் தடுப்பைத் தேர்வு செய்தார்.

பெங்களூரு அணி குறைந்த பட்சம் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றாக வேண்டும் என களமிறங்கியது.

**டுபிளசி அரைச்சதம்**

பெங்களூரு அணிக்கு ஹோலி, அணித் தலைவர் டுபிளசி ஜோடி ஆரம்பம் வழங்கியது. 3 ஓவரில் 31/0 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழையால்போட்டி நிறுத்தப்பட்டது. மீண்டும் போட்டி தொடங்கியது. கோலி, 47 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

டுபிளசி (54) அரைச்சதம் அடித்தார்.ரஜத் படிதர் 41 ஓட்டங்கள் எடுக்க, தினேஷ் கார்த்திக் (14), மக்ஸ்வெல் (16) சற்று உதவினர்.


20 ஓவர்களில் பெங்களூரு அணி, 5 விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைக் குவித்தது.

**ரச்சின் ஆறுதல்**

சென்னை அணி 20 ஓவரில் 201 ஓட்டங்கள் எடுத்தால், "பிளே ஓப்" செல்லலாம் என களமிறங்கியது. மக்ஸ்வெல் வீசிய முதல் பந்தில் ருது ராஜ், "டக்" ஆட்டமிழந்தார். மிட்செல் (4) ஏமாற்ற, ரகானே 33 ஓட்டங்கள் எடுத்தார். ரச்சின் ரவிந் திரா 61 ஓட்டங்களில் வீணாக ரன் அவுட்டானார். துபே (7 ஓட்., 15 பந்து) பந்துகளை வீணடித்தார். சான்ட்னர் (3), டுபிளசியின் அசத்தலான "பிடியெடுப்பில்" வீழ்ந்தார்.

கடைசி ஓவரில் சென்னை 35 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி, 17 ஓட்டங்கள் எடுத்து தோற் றால் "பிளே ஓப்" செல்ல முடியும் என்ற நிலை ஏற்பட, நள்ளிரவில் "திக்... திக்" என ரசிகர்கள் நெஞ்சம் பதறியது.

யாஷ் தயாள் பந்து வீசினார். முதல் பந்தில் சிக்சர் அடித்த தோனி (25), அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார். 3, 4வது பந்தில் ஷர்துல் 1 ஓட்டம் மட்டும் எடுத்தார். கடைசி 2 பந்துகளில் 10 ஓட்டங்கள் தேவைப்பட ஜடேஜா பந்தை வீணடித்தார். முடிவில் 7 ஓட்டங்கள் மட்டுமே எடுக்கப்பட்டன. சென்னை அணி 20 ஓவரில் 191/7 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது. ஜடேஜா (42) ஆட்டமிழக்காமல் இருந்தார்.




**கடைசி போட்டியா?**

சென்னை அணியின் முன்னாள் தலைவர் தோனி. இத்தொடருடன் ஐ.பி.எல்., அரங்கில் இருந்து விடை பெறுவார் என நம்பப்படுகிறது. தற்போது சென்னை "பிளே ஓப்" வாய்ப்பை இழந்து வெளியேறியது. இதனால் பெங்களூருவுக்கு எதிராக களமிறங்கியது, தோனியின் கடைசி ஐ.பி.எல்., போட்டியாக இருக்கலாம்.

## தமிழர்களுடைய...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு (வடக்கு-கிழக்கு) ஏற்பாட்டில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வின்போது தமிழினப் படுகொலை முள்ளிவாய்க்காலில் உச்சந்தொட்டு 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் வெளியிடப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் பிரகடனத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதீன முதற்குரு தவத்திரு. அகத்தியர் அடிகளாரால் வாசிக்கப்பட்ட இந்தப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழினப்படுகொலை முள்ளி வாய்க்காலில் உச்சந்தொட்டு இன்றுடன் (நேற்று) 15 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

ஒவ்வொரு படுகொலைக்குப் பின்னரும் “இனிமேல் இது நடக்கவே கூடாது” என்ற உணர்வுப் பிரவாகம் வலுவாக எழுந்தாலும், அதுவே தொடர்கின்றது. இனிமேல் நடக் கவே கூடாது என்ற உணர்வுப் பிரவாகம் அர்த்த மற்றதாகி விட்டது. ஈழத்தமிழினப் படுகொலை ஒரு வரலாற்று செயன்முறையாக காலணித்து வத்திலிருந்து ஆரம்பிக்கின்றது.

தமிழினப் படுகொலையின் வழி வரைபடம் பேரரசுக் கட்டமைப்பின் புவி சார் அரசியல் நலன்களைத் தவிர்த்து உருவாக்கப்படவில்லை என்பது ஐய முற தெரிகின்றது.

புவிசார் அரசியல் நலன்களின் பிராந்திய தளங்களில் ஏகாதிபத்தியத்தை தக்கவைப்பதற்காக பேரரசுக் கட்டமைப்பை துணைக் குத்தகைக்கு விட்டுள்ளது.

அதனுடைய ஒரு வடிவமாகத்தான் இஸ்ரேலையும் இலங்கையையும் அவதானிக்க வேண்டும். தமிழினப் படுகொலை நடந்து 15ஆவது ஆண்டில் பலஸ்தீனப் படுகொலை அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்றார். (ம-7,10)

**புதிய காவலன் திருமண பொருத்துனர்**
**அல்வாய் - கோப்பாய்**

18.05.2024இல் வலம்புரியில் 4ஆம் பக்க விளம்பரம் சில திருத்தங்களுடன் மீளப் பிரசுரிக்கப்படுகின்றது

2வது 07.04.1966 விசாகம் 4ஆம் பாதம் உதயத்தில் சூரியன் செவ்வாய் (மீனம்) சேர்ந்திருக்கும் B.Sc கொம்பியூட்டர் என்ஜினியர் மணமகனுக்கு உயர் கல்வி அல்லது டிப்ளோமா முடித்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

5வது 25.04.1996 புனர்பூச நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்த அவுஸ்திரேலிய எலக்றிகல் என்ஜினியருக்கு உதயத்தில் 12ல், 4ல் சூரியன் செவ்வாய் சேர்ந்திருக்கும் உயர் கல்வி கற்ற மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். (மேட இலக்கினத்தில் சூரியன் செவ்வாய் உண்டு)

3வது உயரம் 5 அடி 11 அங்குலம் (C-0399)

**077 663 0273**

**கோழிகள், முட்டைகள் மலிவு விலையில்**

நியூ சிற்றி கோழிக்கடை யாழ்ப்பாணத்தில் 34 வருட பூர்த்தியை முன்னிட்டு கோழிகள், முட்டைகள் மலிவு விலையில்

- இலங்கையின் No 1 சிக்கன் விற்பனையாளர்
- வாடிக்கையாளர்கள் நலன் கருதி எமது நிறுவனம் (18/05/2024) அன்று காலை 8.30 மணிக்கு அடுத்த கிளை திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தி அருகாமையில் இராமநாதன் வீதியில் நியூ சிற்றி கோழிக் கடை திறக்கப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர் நலன் கருதி 24 மணி நேர சேவை
- புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ், ஊர்க்கோழி முட்டைகள்
- மொத்த கொள்முதல் ரான்ஸ்போட் இலவசம்
- எமது தலைமை காரியாலயம் இல.8, குருநகர் மாக்கற் முன்பாக யாழ்ப்பாணம்.

(817)

**021 430 3354, 076 359 3354**

**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (750)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION MoneyGram Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

## மரண அறிவித்தல்

### சம்பந்தப்பிள்ளை நடராசா


பிறப்பு : 1948.03.14 | இறப்பு : 2024.05.18

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சம்பந்தப்பிள்ளை நடராசா அவர்கள் நேற்று (2024.05.18) சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சம்பந்தப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்றவர்களான விசயரத்தினம் - கணேஸ்வரியின் மருமகனும் கலாநிதியின் அன்புக் கணவரும் சரவணபவன் (லண்டன்), சாந்தி, உமா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருள்ரஜனி (லண்டன்), சிவகஜன், அன்பு வடிவேல் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, முத்துமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜெய்சி, ஜெய்சன் (லண்டன்), குகாயினி, தர்னிகன், அபிசாயினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (2024.05.20) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி பூனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உடையார் ஒழுங்கை,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (812)

தகவல் : குடும்பத்தினர்
076 027 4253

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1985 சதயம், கும்பராசி 10 இல் செவ்வாய், கி.பா 25, உயரம்-168cm, அரச உத்தியோகத்தர் (கௌரவகுலம்)

தராதரம் - B.Sc, Audio Engineering
Dip.in.media studies
M.A.(Philosophy)
M.A.(Cultural Studies)

எதிர்பார்ப்பு- வீடு/ காணி
தொடர்பு- 021 222 8212 (792)


## ஸ்ரீ ரவிசங்கர் இலங்கைக்கு விஜயம்



(கொழும்பு) பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் அழைப்பின் பேரில் ஆன்மிக குரு, அமைதித் தூதுவர், வாழும் கலை பயிற்சி நிலையத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ ரவி சங்கர் நேற்று சனிக்கிழமை நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

அவரை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விமான நிலையத்தில் வரவேற்றுள்ளார்.

ஸ்ரீ ரவி சங்கர் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நுவரெலியா சீதாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ள மஹா கும்பாபிஷேக பெருவிழாவில் கலந்து கொள்ளவுள்ளார்.(நி-6)


### “நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன் -காரணம் என்னிடம் அதிகம் இருப்பதால் அல்ல- இல்லாதவனின் வலியைப் புரிந்து கொண்டதால்”

யாழ்.சென் பற்றிக்ஸ் பாடசாலைக்கு அண்மையில் அதி நவீன வசதிகளுடன் 6 பரப்புடன் கூடிய வீடு மூன்றும் மானிப்பாய் வீதி 3 கடைகளும்,யாழ் கஸ்தூரியார் வீதியில் 31/2 காணியும், யாழ். தட்டாதெருவுக்கு அண்மை யில் 2 1/2 பரப்பு காணியும், யாழ்.பிறவுண் வீதியில் 5 பரப்பு காணியும், யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 52 அடி அகலமும் 214 அடி நீளமும் கொண்ட 3 கடைகளும் யாழ்.திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் ஆடியபாதம் வீதியில் 5 பரப்புக் காணியும், யாழ்.மின்சார நிலைய வீதியில் பழைய தபாற்கந்தோர் வீதியில் 4 1/2 பரப்பு காணியும், யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நம சிவாயப் பாடசாலைக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும்,யாழ்.கஸ்தூரியார் வீதியில் 16 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்ட மாடிக் கடை யும், யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் 5 பரப்பில் அமைந்த மாடி வீடும், யாழ். மின்சார நிலைய வீதியில் 3 பரப்பு, 4 பரப்பு காணியும் பிரப்பன்குளம் வீதியில் 5 பரப்பும் வீடும் விற்பனைக்கு உண்டு. (சி-0393)

T.P-077 723 2535
கனகசபை தர்மகுலசிங்கம்,
இல-183 காலி வீதி.

இல, 185 மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.



### இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள் பிரிவு 53

- Diploma in English / Spoken English
- Diploma in ICT / AI
- Diploma in Psychology & Counceling
- Diploma in Leadership & Business Management
- Diploma in Political Science

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 25, 26.05.2024 - 10 AM
◈ காலம் : 03 மாதங்கள் ◈ சான்றிதழ் பிரிவுகள்

IPS To your Future
Thirunelvely
T.P: 074 234 9120 (795)



## வீடு விற்பனைக்கு

சோமசுந்தரம் அவெனியுவில் வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய 1 3/4 பரப்பு வீடு விற்பனைக்கு உண்டு.

(796)

தொடர்பு
076 116 3919



## பதவி வெற்றிடம்

ஜயசிங்க விநியோகஸ்தர்கள் தையல் நூல் மற்றும் ஆடை அணிகலன்களின் முன்னணி விநியோகஸ்தர் ஆவார். இது நாடளாவிய சில்லறை விற்பனையாளர்களை உருவாக்கியுள்ளது. தங்கள் வாழ்க்கையில் தெளிவான இலக்குகளைக் கொண்ட மற்றும் வாழ்க்கையின் வெற்றிக்கான லட்சியங்கள் நிறைந்த விற்பனைப் பிரதிநிதிகளை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்

கீழ்வரும் பதவி நிலைக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### விற்பனை பிரதிநிதி

**கடமைகள்:**

✓ விற்பனை நிலையங்களுக்குச் சென்று வாடிக்கையாளர்களின் முற்பதிவுகளை மேற்கொள்ளல்.
✓ பொருத்தமான முறையில் வாடிக்கையாளர்களின் நிலுவைகளை வசூலித்தல்.
✓ வாடிக்கையாளர்களிடையே எமது சின்னத்தை விளம்பரப் படுத்தல்.

**தகைமைகள்:**

✓ க.பொ.த. (உ/த) சித்தி.
✓ செல்லுபடியாகும் இலகுரக வாகன ஓட்டுநர் உரிமம்.
✓ தொடர்பாடல் திறன்.
✓ அதிக தனிப்பட்ட திறன்களைக் கொண்டவராகவும், குறைந்தபட்ச மேற்பார்வையுடன் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ளவராக இருக்க வேண்டும்.
✓ தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் சரளமாக உரையாடக் கூடிய திறன்.

APPLE THREAD
APPLE THREAD COMPANY (PVT)LTD.
354/D, Meemana, Pokunuwita
Tel : 0773911922 / 0779 310 115
Email : sales.applethread@gmail.com
(சி-2230)


## இராசிபலன்

19.05.2024
வைகாசி 06, ஞாயிற்றுக்கிழமை-
ஏகாதசி பிற்பகல் 2.40 மணிவரை
அத்தம் பின்னிரவு 3.58 மணிவரை

சுபநேரம் -8.52-10.22 மணிவரை
இராகுகாலம்-4.22-5.52 மணிவரை
ஏகாதசி விரதம், அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்
அவிட்டம்.

வளவன்



**மேஷம்**: நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.



**கடகம்**: வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், கனி வாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.



**துலாம்**: புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள்,ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம்.



**மகரம்**: ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் குதூகலம் காண வேண்டிய நாள்.



**ரிஷபம்**: பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**சிம்மம்**: குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், பேச்சில் இனிமை தென்படும்,சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், போசன சுகமுண்டு.



**விருச்சிகம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.



**கும்பம்**: மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, வாழ்க்கைத் துணைவழியே சிறு மனக் கசப்பு ஏற்பட்டு அகலும், விரையங்கள் கூடும்,வழிபாட்டால் உயர்வு காண வேண்டிய நாள்.



**மிதுனம்**: தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**கன்னி**: பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரிக்கைகள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



**தனுசு**: தொழில் ரீதியான புதிய முதலீடுகள் எல்லாம் உருவாகும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், செயற்பாடுகளில் விசுவாசம் காட்டுவீர்கள்.




**மீனம்**: வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், குடும்பத்தினரிடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும்,மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

மனிதனின் ஆசைக்கு [illegible] றலுக்கும் எல்லையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதிர்க்கடன், ஆத்மசாந்தி பிரார்த்தனையில் பெருமளவான மக்கள் பங்கேற்பு



(நெளுக்குளம்)

2009ஆம் ஆண்டு இடம் பெற்ற விடுதலைப் போராட்டத்திலே முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கான பிதிர்க்கடன் செய்யும் வழிபாடும், ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனையும் நேற்றுக் காலை 7.30 மணி முதல் முள்ளிவாய்க்கால் கப்பல் வீதியிலே உள்ள கடற்கரைப் பகுதியில் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இடத்திலே நேர்த்தியான முறையில் இடம்பெற்றது.

குறித்த பிதிர்க்கடன் வழிபாட்டில்உறவுகளை இழந்த பெரும்திரளான மக்கள் வருகைதந்து இறந்தவர்களின் பெயர் கூறி பிதிர்க்கடனை நிறைவேற்றியிருந்தார்கள்.

(நி-6-299)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு


# வர்த்தக நிலையங்களை மூடி வர்த்தகர்கள் ஆதரவு

(முறிகண்டி)

முள்ளிவாய்க்கால் நிகழ்வுக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு உணர்வுபூர்வமாக ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

உணவகங்கள், மருந்தகங்கள் தவிர்த்த ஏனைய வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு உணர்வுபூர்வமாக ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொதுச்சந்தை உள்ளிட்ட அனைத்து வர்த்தகச் செயற்பாடுகளும் கைவிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. (நி-6-100)



# யாழ். பல்கலையில்

## உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் தின நினைவேந்தல் நிகழ்வானது நேற்று பல்கலைக்கழகத்தின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபியில் நடைபெற்றது.

இதன்போது பொதுச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டதுடன் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் இதன்போது முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-6-33)

# சவப்பெட்டிகளுடன் சென்ற ஊர்தி பொலிஸாரால் தீவிர சோதனை





(தருமபுரம்)

முள்ளிவாய்க்காலில் கொலை செய்யப்பட்ட மக்களிற்கு நீதி கோரி பதாதைகள், காட்சிகள் அமைக்கப்பட்ட ஊர்தி கிளிநொச்சியிலிருந்து முள்ளிவாய்க்காலை சென்றடைந்தது.

குறித்த ஊர்தியை பொலிஸார் கடுமையாக சோதனைக்குட்படுத்தியிருந்தை குறிப்பிடத்தக்கது. (நி-6-316)

# முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு நீதிகோரி வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம்

(குருமன்காடு)


வவுனியாவில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தலின் 15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கவனயீர்ப்பு போராட்டமானது நேற்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரின் போராட்ட இல்லத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி 2645 ஆவது நாளாக போராடி வரும் உறவுகள், இனப்படுகொலைக்கு நீதி கோரியும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரியும் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.



அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தியவாறு காணாமல் [illegible] ஆக்கப்பட்டோரின் தாய்மார்கள் இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் கண்ணீர் மல்க தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தினர். (நி-6-[illegible])



தமிழ் மக்கள் கூட்டணி செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினரான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனின் வாஸஸ் தலத்தில் தீபச் சுடர் ஏற்றி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 442
Viber 076 636 3378



# மே 18 உலக வரலாற்றில் கறை படிந்த நாள்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பல தடைகளுக்கு மத்தியில் உணர்வு பூர்வமாக நடந்து முடிந்திருக்கிறது. உணவு ஓர் இனத்தின் வலி- மிகுந்த வாழ்வை பிரதி பலிக்கின்றது என்றால் உலக வர லாற்றில் அது முள்ளிவாய்கால் கஞ்சி என்று அடித்துக் கூற முடியும். ஆம் தமிழினம் முள்ளிவாய்க்காலில் உயிர் வாழ்வதற்கு உயிராயுதமாக பயன்படுத்தியது தான் இந்த முள்ளிவாய்கால் கஞ்சி.

அதில் அப்படி என்ன இருக்கிறது என இப்போதும் கேட்பவர்கள் இருக்கவே செய்கின்றனர். ஒரு சிறிய பிரதேசம், அங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரைப் பாதுகாக்க நெருங்கி இருக்கின்றனர். அந்த மக்கள் நெருக்கத்தை சல்லடை போட்டுக் கொண்டிருந்தது குண்டு மழை. எங்கு பார்த்தாலும் மரண ஓலம், பசி, பட்டினி, குடிக்க நீர் இல்லை, சுவாசிக்க சுத்தமான காற்று இல்லை. இறந்த உடல்களை எரியூட்டவோ, புதைக்கவோ அவகாசம் இல்லை.

அந்தளவிற்கு குண்டு மழை மக்கள் தலை மீது பொழியப்பட்டுக் கொண்டே இருந்தது. இந்த நிலையில் தான் எம் இனம் உயிர் வாழ உயிராயுதமாய் இருந்தது முள்ளி வாய்கால் கஞ்சி.

கஞ்சி என்றால் அரிசி நன்கு அவிந்து இருக்கும், தேங்காய்ப் பால், உப்பு சரியாக கலந்திருக்கும். அப்படிப்பட்ட அமிர்தமான கஞ்சி எம் மக்களுக்கு முள்ளிவாய்க்காலில் கிடைக்கவில்லை. அவிந்தும் அவியாத அரிசி, பால் இல்லை, உப்பு இல்லை, சுத்த மான நீர் இல்லை. அப்படிப்பட்ட ஓர் உணவை எம்மால் நினைத்துப் பார்க்க முடிகிறதா?

ஆனால் எம் இனம் இதைத் தான் பருகியது. குண்டு மழையின் மத்தியில் இந்தக் கஞ்சி தான் மிஞ்சியிருந்த எம் உறவுகளின் உயிரைக் காத்தது.


தங்கக் கிண்ணத்தில் பால் குடித்த எம் இனத்திற்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி குடிக்க ஒரு பிளாஸ்ரிக் கிண்ணம் கூட கிடைக்கவில்லை. தமிழினத்தின் பசி தீர்க்க பயன்பட்டவை சிரட்டைகள் தான்.

பயங்கரவாதத்திற்கு எதிராக நடை பெறும் போர் என ஆட்சியாளர்கள் அறை கூவினாலும் ஒரு இனத்திற்கெதிரான இன அழிப்பே அங்கு அரங்கேறியது.

மே-18 தமிழினம் வீழ்த்தப்பட்ட நாள். ஆட்சியாளர்களுக்கு அந்நாள் வெற்றி விழா கொண்டாடும் நாள். அவர்கள் பாற்சோறு பொங்கி உண்டு மகிழும் நாள். ஆனால் தமிழினத்திற்கு அந்நாள், கறைபடிந்த நாள். தன் சொந்தபந்தங்களை இழந்த நாள். தன் துயரத்தை உரத்துக் கூறி அழ முடியாத நாள். இழந்த சொந்தங்களை நினைவுகூர தடை விதிக்கப்பட்ட நாள்.

இந்த நாடு அனைவருக்கும் சொந்த மானது என ஆட்சியாளர்கள் கூறிக் கொண்டாலும், இது சிங்கள- பௌத்த நாடு என்பதை தமிழ் மக்கள் மீது கட்ட விழ்த்து விடப்படும் வன்முறையினூடாக தெரிவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அப்படி தமிழினம் என்ன குற்றம் செய்து விட்டது? இறந்த தனது உறவுகள் மடிந்த நாளில் அவர்களை நினைவு கூருவதில் என்ன தவறு இருக்கிறது? தன் இனம் பட்ட இன்னலின் வெளிப்பாடான முள்ளிவாய்க்கால் கஞ்சியை பருகி எம் இனத்தின் வலியை வெளிப்படுத்துவதில் எங்கு பயங்கரவாதம் இருக்கிறது? திருகோணமலையில் முள்ளி வாய்க்கால் நினைவு நாளை அனுஷ்டித்து, முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியவர்களை கைது செய்த பொலிஸார் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கும் நீதிமன்றினூடாக தடை உத்தரவு மேற்கொண்டிருக்கிறார்கள்.



**“உணவு ஒன்று ஓர் இனத்தின் வலிமிகுந்த வாழ்வைப் பிரதிபலிக்கின்றது என்றால் அது முள்ளிவாய்க்கால் கஞ்சியே! எம் இனம் இதைத்தான் பருகியது. குண்டு மழையில் மிஞ்சியிருந்த எம்மினத்தின் உயிராயுதமானதும் இந்தக் கஞ்சியே!”**

மடிந்துபோன தம் உறவுகளை நினைவு கூருவதைத் தடுக்கும் வகையில் ஓடி ஓடி தடை உத்தரவை பெற முற்படுவது ஒரு நாளும் இன நல்லிணக்கத்தைத் தராது. முள்ளி வாய்க்கால் நினைவு நாள் என்பது விடுதலைப் புலிகளை நினைவூட்டும் நாள் என காரணம் காட்டி அதற்கு தடை உத்தர வைப் பெற முனைவது ஒரு நாளும் அற மாகாது.

பாதுகாப்புத் தரப்பினரின் இவ்வாறான நடவடிக்கைகள் நிச்சயம் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வையே ஏற்படுத்தும். இதைப் புரிந்து கொண்டு நடப்பது ஆட்சியாளர்களின் தார்மீக கடமை.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலம் நெருங்கும் வேளையில் பெரும்பான்மை இன வாதிகள் இன வன்மத்தை கக்கத் தொடங்கியிருப்பதை காணமுடிகிறது. படையினருக்கு எதிரான போர்க்குற்ற மீறல்கள் நிரூபிக்கப்பட்டால் தனி நாட்டுக் கோரிக்கை வெற்றி பெற்றிருக்கும் என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

தமிழீழம் மலர்ந்திருந்தால் இன்னொரு காசாவாக தெற்கு இருந்திருக்கும் என்கிறார் இனவாதி விமல் வீரவன்ச. காசாவில் நடப்பதை விட நூறு மடங்கு மிகப் பெரும் கொடுமைகளும் அழிவுகளும் நடந்த முள்ளிவாய்க்காலை கண்டு கொள்ளாத வீரவன்ச தமிழீழம் மலர்ந்திருந்தால் தெற்கு, காசாவாக மாறி இருக்கும் எனக் கூறியிருப்பதற்குள் இருக்கும் இன ஓரவஞ்சகத்தை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

ஆக, ஒரு இனத்தை அழித்து, கொடுமைப்படுத்தி, ஓரவஞ்சகம் செய்து அவர்களை பயங்கரவாதிகளாகக் காட்ட முற்படுவது ஆட்சிப் பீடத்திற்கு நல்லதல்ல என்ற செய்தியை இந்த முள்ளிவாய்க்கால் வாரம் நன்கு எடுத்தியம்பியிருக்கிறது.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றிய பொது சுகாதார தாதிய சகோதரி (PHNS) திருமதி. பரமேஸ்வரி பரமநாதன் அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரமடைகின்றோம்.

யுத்த கால சூழலில் திருமதி. பரமநாதன் அவர்கள் யாழ்ப்பாண மக்களுக்கு அளப் பெரும் சேவையாற்றியவர்.

அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.


யாழ்ப்பாணத்தில் பிரெஞ்சுமொழியை எமது தமிழ் மாணவர்களுக்குக் கற்பித்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த திரு.ஜெராட் றொபுச்சன் அவர்கள் யாழ்ப்பாணத்தில காலமாகிவிட்டார். அவரின் உடல் யாழ்ப்பாணத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்து மக்களோடு மக்களாக வாழ்ந்த அவருக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க பண்டிதர் குரல் கொடுத்தார்.




திருமதி.பரமேஸ்வரி பரமநாதன்



ஜெராட் றொபுச்சன்

**பண்டிதர்:-** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் நூறாவது ஜனன ஆண்டு நிகழ்வுகள் அண்மையில் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரியில் நடை பெற்றது.

இருந்தும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழ கத்தமிழ்த் துறையினர் கூட அந்நிகழ்வில் முழுமையாகக் கலந்து கொள்ளவில்லையாம்.



## நன்றி மறந்த யாழ்ப்பாணம் என்பதை நாங்கள் மாற்றி அமைக்க வேணும்

**விதானையார்:-** எங்கட யாழ்ப்பாணத்தின்ர நிலைமை இது தான். பதவியில இருக்கும் போது முப்பொழுதும் திருமேனி தீண்டுவர்.

பதவியைவிட்டு இறங்கினால் அவ்வளவு தான் எல்லா நன்றியும் மறக்கப்பட்டு விடும்.

**கங்காணி:-** உண்மை தான். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர முதலாவது துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன். இருந்தும் அவற்ற நூறாவது ஆண்டு ஜனன நிறைவில அவர் சார்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எந்த நிகழ்வையும் செய்யவில்லை எண்டு சொல்லுகினம்.

**விதானையார்:-** நன்றி மறந்த இனம் வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. ஆகையால எங்கட இனமும் நன்றி மறந்த இனமாக மாறுவதை நாங்கள் ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

**மூப்பர்:-** அதற்கு என்ன விதானையார் செய்யிறது.

**விதானையார்:-** என்னைப் பொறுத்தவரையில தமிழ்ப் பணி ஆற்றியவர்கள், தமிழ் இனத்திற்குத் தூய்மையான அரசியலை வழங்கியவர்களை நினைவு கூரும் பொருட்டு அவர்களின்ர உருவச் சிலைகளை யாழ்ப்பாணக்கோட்டைக்கு தென் புறமாக இருக்கிற கடலோரத்தில நிறுவ வேணும்.

அதில பேராசிரியர் வித்தியானந்தனின் உருவச்சிலையையும் அமைக்கலாம்.

**வாத்தியார்:-** விதானையார் சொல்லுறது சரி தான். அதேநேரம் பேராசிரியர் வித்தியானந்தன் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். ஆகையால தெல்லிப்பழை சந்தியில பேராசிரியர் வித்தியானந்தனின் சிலையை நிறுவுவது பொருத்தமாக இருக்கும்.

**சாத்திரியார்:-** ஓ! முன்பு தான் சந்திகளில சிலையை வைத்தால், காகம் எச்சம் போடும் எண்டதொரு கருத்தும் இருந்தது. ஆனால் இப்ப வைத்த சிலையை சுற்றி கண்ணாடி பிற்றிங் போடக் கூடிய எத்தனையோ வசதி வாய்ப்புக்கள் வந்துட்டுது.

**வாத்தியார்:-** தலைவர் பிரபாகரனின்ர சகோதரர் அண்மையில தமிழகத்துப் பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில்; தலைவர் பிரபாகரன் வீரமரணம் அடைந்து விட்டார் என அறிவித்திருக்கிறார்.

இப்படி அவர் ஓர் அறிவிப்பை விடுவதற்குக் காரணமும் உண்டு. அதாவது தலைவர் பிரபாகரன் அவரது மகள் துவாரகா ஆகியோர் உயிரோட இருப்பதாகக் கூறி, வெளிநாடுகளில இருக்கிற சில புலம் பெயர் அமைப்புகள் நிதி சேகரிக்கிற வேலையில ஈடுபடுகினம்.

அதைத் தடுக்கத்தான் விடு தலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வீர மரணம் அடைந்துவிட்டார் என்பதை அவரின் சகோதரர் பகிரங்க மாகக் கூறியுள்ளார்.

**கங்காணி:-** அப்ப எங்கட பழ.நெடுமாறனும் தெரியாத்தனமாகப் பேட்டி கொடுத்திருக்கிறார் போல.

**மூப்பர்:-** பழ.நெடுமாறன் மட்டுமல்ல, பிரபாகரனின் மனைவி மதி வதனியின் சகோதரி என்று தன்னை அறிமுகப்படுத்தின ஒருவரும் பிரபாகரன் விரை வில் வெளித் தோன்றுவார் எனக் கூறினவர் தானே!

**விதானையார்:-** இது தான் நடக்குது. புலிகள் அமைப்பைச் சாட்டி பணம் பறிக்கிற கூட்ட மொன்று வீரத் தலைவனுக்கு மாசு கற்பிக்கத் தலைப்பட்டிருக்குது.

**சாத்திரியார்:-** கனடாவில இருந்த எனக்குத் தெரியும். வெளிநாடுகளில புலம் பெயர் அமைப்புக்ள் கனக்க இருக்குது.

அதில ஒரு சில அமைப்பினர் தமிழ்ப் பற்றோட செயற்படுகினம். மற்றும்படி ஏனைய அமைப்புகள் புலிகளின்ர பணத்தை வைத்துக் கொண்டு சீவியம் நடத்துகினம்.

இன்னும் சில அமைப்புகள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சாட்டிப் பணம் சேகரிக்கினம்.

**பண்டிதர்:-** அதெண்டால் உண்மைதான். வெளிநாட்டில இருக்கிற சில அமைப்புகள் இலங்கை நிலவரம் தொடர்பில அந்தநேரம் யசூகி அகாஷி மற்றும் யு.என் அமைப்புகள் விட்ட அறிக்கைகளை இப்ப பத்திரிகைகளில விளம்பரமாகப் பிரசுரிக்கினம்.

இது இப்ப ஏன் எண்டு கேட்டால், அதுகளுக்குக் காரணம் தெரியல்ல.

நிலைமையை விசாரித்துப் பார்த்தால், அந்த அறிக்கைகளை பத்திரிகையில விளம்பரப்படுத்துகிற வேலையில இலங்கைப் படையினருக்குத் தகவல் வழங்குகின்ற பிரிவுகளோட இணைந்து செயற்படுபவர்களுக்கும் தொடர்பு உண்டு என அறிய முடிகிறது.

**சாத்திரியார்:-** அப்ப பாருங்களன். எங்கட இனத்தின்ர நிலைமை எப்படி இருக்கு தெண்டு.

பெருமூச்சு விட்டவாறு சாத்திரியார் கூற, அந்நேரம் பார்த்து அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கினால் பயங்கரவாதம் ஆகுமா வியாசரே?

**டனுஷாந்ராசா — திருநெல்வேலி**

**இறுதி யுத்தத்தின் போர்க்குற்ற விசாரணை முடிந்து விட்டதாம். உண்மையா வியாசரே?**

எதையும் இழந்தவனுக்கே அதன்வலி தெரியும். இல்லையேல் பிறர் வலி நிறைந்த வாழ்க்கையையாவது உணர்ந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இது இரண்டும் இல்லாமல் வெறும் வாயை மென்றால் அதில் பயன் ஏதும் இல்லை என்பதே உண்மை.

**இளங்கோ — மானிப்பாய்**

**பெற்றோர் சரியாக பிள்ளை வளர்க்காதது அறியாமையா? அக்கறையின்மையா வியாசரே?**

நான் தவறு செய்து கொண்டு மற்றவரை திருத்த முற்பட்டால் அவர்கள் எமது பேச்சைக் கேட்பார்களா?
இக்கால பெற்றோரின் நிலையும் இது தான். தாம் தொலைபேசிக்குள் முகம் புதைத்தபடி இருந்து கொண்டு பிள்ளைகளை எப்படித் திருத்த முடியும்.
தாங்கள் தொலைக்காட்சித் தொடர் என்ற நரகத்துக்குள் வீழ்ந்து கிடந்து கொண்டு பிள்ளைகளைத் தூக்கி நிறுத்த எப்படி முற்படுவார்கள்.
முதலில் உன்னைத்திருத்து சமுதாயம் தானாகத்திருந்தும். அவ்வளவே.

**சமரன் — மட்டக்களப்பு**

**முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியதற்கு கைது செய்யப்பட்டது தொடர்பில் தங்களின் கருத்து?**

தமிழினம் அடிமைப்பட்ட இனம். அந்த இனம் சுயமாக எதையும் சிந்திக்கக் கூடாது.
அப்படிச் சிந்தித்தால் நாம் தலையில் அடித்து அமர்த்துவோம்.
இதுதான் பெரும்பான்மை ஆட்சியாளர்களின் சிந்தனை.
இந்தச் சிந்தனை தான் நாட்டில் இரத்த ஆறு ஓடக் காரணமாக இருந்தது என்பதை அவர்கள் ஒரு நாளும் மறந்து விடக் கூடாது.

**விஜயதரன் — உரும்பிராய்**

**முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கினால் பயங்கரவாதம் ஆகுமா வியாசரே?**

வேண்டாப் பொண்டாட்டி கைதொட்டால் குற்றம். கால் தொட்டால் குற்றம் என்றொரு பழமொழியுண்டு.
தமிழர் விடயத்தில் இலங்கை ஆட்சியாளர்களின் மனோ நிலையும் இதுவே.




**அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**ஜெகமோகன் — கிளிநொச்சி**


**தனியார் துறைகளில் தொழில் புரியும் பெண்களை தவறாக பார்ப்பவர்கள் இப்போதும் இருக்கிறார்களே வியாசரே?**

தவறு என்பது பார்ப்பவர் கண்களைப் பொறுத்ததே தவிர வேறு எதுவும் இல்லை.
ஒரு விடயத்தை ஆண் செய்தால் அதில் தவறேதும் இல்லை. அதே விடயத்தைப் பெண் செய்தால் அதில் நூறு தவறு கண்டு பிடிப்பவர்கள் இருக்கிறார்கள் என்றால், பிழை பெண்ணில் அல்ல. பார்ப்பவர் கண்ணிலேயே.
முதலில் இவ்வாறான குறுகிய மனப்பான்மையை தூக்க வேண்டும்.
உங்கள் வீட்டில் இருக்கும் அம்மா, மனைவி, மகள், சகோதரி இவர்களும் பெண்களே என்ற மனநிலையை உருவாக்கினால் சகலதுக்கும் தீர்வு கிடைக்கும்.

**துஷிகரன் — வடமராட்சி**

**மே 18 இல் உறவுகளுக்கு கவிதை ஒன்றினால் அஞ்சலிப்பீர்களா வியாசரே?**

உறவுகளின் உணர்வு வலை
சிதைக்கப்பட,
மடியறுந்த மீன்களாய்
குண்டு மழை பொழிய,
உயிரிழந்த உறவுகளின்
செங்குருதி நந்திக்கடலில்
கலந்து கதைசொன்னது
“போர் குற்ற மீறல்” என்று



பருத்தித்துறை இ. போ.ச சாலை காப்பாளர் பாலமயூரனின் மனித நேய செயற்பாடு பற்றி?

**சுரேசன் — பத்தமேனி**

**திருவிழாக்களில் வெடி கொழுத்தி விசும்புத் தனம் காட்டும் எம்மவர்கள் பற்றி?**

இவை அறியாமையின் வெளிப்பாடே.
பணம் படைத்தவர்கள் தமது பவரை ஊருக்குக் காட்டுவதற்கு இவ்வாறு காசைக் கரைப்பார்கள்.
வெடிவெடிப்பதுடன் எல்லாம் முடிந்து போய்விடும்.
அந்தப் பணத்தில் ஒரு ஏழைக்கு உணவளித்தால். கல்விக்கு உதவினால் உங்கள் பெயர் நிலைத்து நிற்கும் என்பதையும் உள்ளத்தால் அவர்கள் உங்களுக்கு நன்றி கூறுவார்கள் என்பதையும் ஏன் புரிந்து கொள்கிறீர்கள் இல்லை.
ஆடை, அணிகலன் , கேளிக்கை, வாணவேடிக்கை இவற்றை இறைவன் விரும்புவதில்லை. இது தான் உண்மை.

**பாலு — பருத்தித்துறை**

**பருத்தித்துறை இ. போ.ச சாலை காப்பாளர் பாலமயூரனின் மனித நேய செயற்பாடு பற்றி?**

கிடைத்ததை எடுத்து சுருட்டி பொக்கட்டில் வைக்கும் உலகில், அடுத்தவர் பொன்–பொருளுக்கு ஆசைப்படாதவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு பாலமயூரன் சான்றாகிறார்.
ஒரு ரூபாய் எனினும் நாம் வியர்வை சிந்தி உழைப்பதே சிறப்பு. அடுத்தவர் பொருள் அவரிடம் கொடுப்பதே அறம் என்ற பாலமயூரனின் கொள்கைப் போற்றுதற்குரியது.

**மதுவன் — மீசாலை**

**யுத்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் தனிநாட்டுக் கோரிக்கை நிறைவேறும் என்கிறாரே சரத் வீரசேகர?**

யுத்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால்... என்பதற்குள் யுத்தக் குற்ற மீறல் நடைபெற்றுள்ளது என்பது தானே பொருள்.
அப்படியெனின் நீங்கள் எதையும் செய்யலாம்.
பாதிக்கப்பட்ட நாம் அமைதியாய் அடங்கி இருக்கவேண்டும் அப்படித்தானே?
குற்றம் செய்தவர்கள் அரசனின் தண்டனையில் இருந்து தவறிவிடலாம் **ஆண்டவனின் தண்டனையில் இருந்து தப்ப முடியாது என்பதை சரத் வீரசேகர விளங்கிக் கொண்டால் சரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : கன்னத்தில் முத்தமிட்டால்
இசை : A.R. ரஹ்மான்
பாடியவர் : M.S.விஸ்வநாதன், பல்ராம், மாணிக்க விநாயகம்,
பாடல் வரி : வைரமுத்து



விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே, பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பார்போமா?
உதட்டில் புன்னகை புதைத்தோம்
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்
வெறும் கூடுகள் மட்டும் ஊர்வலம் போகின்றோம்

விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே, பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பார்ப்போமா?
உதட்டில் புன்னகை புதைத்தோம்
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்
வெறும் கூடுகள் மட்டும் ஊர்வலம் போகின்றோம்

கந்தல் ஆனாலும் தாய் மடி போல்
ஒரு சுகம் வருமா? வருமா?

கந்தல் ஆனாலும் தாய் மடி போல்
ஒரு சுகம் வருமா? வருமா?
சொர்க்கம் சென்றாலும் சொந்த ஊர் போல்
ஒரு சுதந்திரம் வருமா? வருமா?
கண் திறந்த தேசம் அங்கே
கண் மூடும் தேசம் எங்கே?

கண் திறந்த தேசம் அங்கே
கண் மூடும் தேசம் எங்கே?

பிரிவோம் நதிகளே பிழைத்தால் வருகிறோம்
மீண்டும் தாயகம் அழைத்தால் வருகிறோம்
கண்ணீர் திரையில் பிறந்த மண்ணை
கடைசியாக பார்க்கின்றோம்

விடை கொடு எங்கள் நாடே
கடல் வாசல் தெளிக்கும் வீடே
பனை மர காடே, பறவைகள் கூடே
மறுமுறை ஒரு முறை பார்ப்போமா?
உதட்டில் புன்னகை புதைத்தோம்
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்
வெறும் கூடுகள் மட்டும் ஊர்வலம் போகின்றோம்

# தனக்கு சுய மருத்துவம் செய்த குரங்கு...

முதல்முறையாக விஞ்ஞானிகள் விலங்குகள் தங்கள் காயங்களுக்கு எவ்வாறு சிகிச்சை எடுத்துக் கொள்கின்றன என்பதை ஆவணப்படுத்தியுள்ளனர்.

மனிதர்களே! தங்களது நோய்களுக்கும், காயங்களுக்கும் சிகிச்சைகளை எடுத்துக் கொள்வதுண்டு. அதுவே விலங்குகள் சிகிச்சைகளை எடுத்துக் கொள்கிறதா என்பது தெரியாது.

ஆனால், சமீபத்தில் ஓராங்குட்டான் ஒன்று தனது காயத்திற்கு தானே சிகிச்சை எடுத்திருப்பதை ஆராய்ச்சியாளர்கள் ஆவணப்படுத்தியுள்ளனர். அதாவது சில விலங்குகள் காடுகளில் உள்ள மருத்துவ தாவரத்தின் மூலம் வைத்தியம் பார்த்து தங்களது நோய்களையும், காயங்களையும் குணப்படுத்திக் கொள்வதாக அவர்கள் கூறியுள்ளனர்.


ரகுஸ் எனப் பெயரிடப்பட்ட ஓராங்குட்டானின் கண்ணிற்குக் கீழே ஒரு பெரிய காயம் இருந்துள்ளது. இந்த ஓராங்குட்டான் தென்கிழக்கு ஆசியாவில் மக்கள் வலி மற்றும் வீக்கத்திற்கு சிகிச்சையளிக்க பயன்படுத்தும் மருத்துவ தாவரத்தின் இலைகளை மென்று அதன் சாற்றைக் காயத்தின் மீது தடவியுள்ளது.

அதன்பின் மென்ற தாவரத்தை பண்டேஜ் கட்டுவது போலக் காயத்தின் மீது வைத்து அழுத்தியுள்ளது. உடலில் எந்த ஒரு பாகத்திற்கும் அந்த சாற்றைத் தடவாமல், காயத்தின் மீது மட்டும் தடவியுள்ளதால், இது ஒரு சுய சிகிச்சை முறை என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். ஒரு மாதத்திற்குள் அதன் பெரிய காயம் மூடி குணமடைந்தது.

இதற்கு முந்தைய ஆராய்ச்சியில் பல வகையான குரங்குகள் காடுகளில் மருந்துகளைத் தேடுகின்றன என ஆவணப்படுத்தப் பட்டிருந்தன. ஆனால், அவை எப்படி தன்னை குணப்படுத்திக் கொள்கின்றன என்பது ஆவணப்படுத்தப்படவில்லை.

முதல்முறையாக விஞ்ஞானிகள் விலங்குகள் தங்கள் காயங்களுக்கு எவ்வாறு சிகிச்சை எடுத்துக் கொள்கின்றன என்பதை ஆவணப்படுத்தியுள்ளனர்.

2022இல் ஓராங்குட்டானின் நடத்தைகள் வீடியோவாக ரெக்கோர்ட் செய்யப்பட்டது. இந்தோனேசியாவின் மேடானில் உள்ள சுவாக் திட்டத்தின் இணை ஆசிரியரும் கள ஆய்வாளருமான உலில் அஸாரி இதனை பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சிவப்பு நிற உதட்டுச்சாய பயன்பாட்டிற்குத் தடை

சிவப்பு என்பது வறுமையின் நிறம், கம்யூனிசத்தின் நிறம் என்று சொல்லப்படுவதுண்டு. இன்னொரு பக்கம், இது அழகு சார்ந்து ஈர்க்கும் நிறமாகவும் உள்ளது. இந்நிலையில், வட கொரியாவில் சிவப்பு நிற லிப்ஸ்டிக்குக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏன்? வட கொரியா சொல்லும் காரணம் இதுதான். சிவப்பு நிற லிப்ஸ்டிக்கானது முதலாளித்துவத்தின் (Capitalism) அடையாளமாகவும், மேற்கத்திய நாடுகளின் ஆளுமையின் அடையாளமாகவும் பார்க்கப்படுவதால் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அந்நாடு கூறுகிறது.

உண்மையில், அதிக மேக்கப் செய்வது மேற்கத்திய கலாச்சாரமாகப் பார்க்கப்படுகிறது. எனவே, வட கொரியாவில் அதிக மேக்கப் செய்து கொள்வது வெறுக்கப்படுகிறது. சட்டத்தின்படி, பெண்கள் அங்கு குறைந்த மேக்கப் மட்டுமே செய்துகொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

மேலும், "சிவப்பு நிற லிப்ஸ்டிக் போடும் பெண்கள் தங்களை அதிக கவர்ச்சியாகக் காட்டலாம், அவர்கள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் எதிர்ப்பதாகக் கருதப்படலாம்" என்று கூறி சிவப்பு நிற லிப்ஸ்டிக் பயன்பாட்டுக்குத் தடை விதித்துள்ளது வட கொரியா.

சமீபத்திய ஆண்டுகளில், வட கொரியாவை ஆளும் கிம் ஜாங் உன் ஆட்சியானது முதலாளித்துவ சித்தாந்தத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் பல பொருள்களையும் தடை செய்துள்ளது. தோலோடு ஒட்டியிருக்கும் ஒல்லியான, அல்லது நீல நிற ஜீன்ஸ் அணிவது, காது தவிர உடலின் பிற பாகங்களில் அணிகலன்கள் அணிவது, பெண்கள் நீண்ட முடி மற்றும் குறிப்பிட்ட சில சிகை அலங்காரங்கள் செய்து கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட சிகை அலங்காரங்கள் மட்டுமே செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதோடு, மக்கள் இந்த விதிகளைப் பின்பற்றுகிறார்களா என்பதை உறுதிசெய்ய ஸ்பெஷல் பொலிஸ்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒருவேளை, தடையை மீறி ஒருவர் நீல நிற ஜீன்ஸ் அணிந்தால் அவர் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும். அவர் தண்டிக்கப்படலாம், அவருக்கு அபராதம் விதிக்கப்படலாம் அல்லது பொது இடங்களில் நிறுத்தப்படலாம். மேலும் அவர்களின் ஆடைகள் மீண்டும் பயன்படுத்தப்படாத வண்ணம் கிழிக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்களில் சிறப்பான நோக்கம் அவசியம்

லட்சியம், இலக்குகள் இல்லாத செயற்பாடுகளில் வெற்றி காண்பது இயலாத காரியம். அதேநேரம் லட்சியத்தைவிடவும் நோக்கம் முக்கியம். ஆம், 'இலக்குகளைவிடப் பெரியது நோக்கம்' என்கின்றன ஞானநூல்கள்.

அந்த ரயில் புறப்பட்டு அரை மணி நேரம் ஆகியிருந்தது. ஜன்னலோரத்தில் இளைஞன் ஒருவன் அமர்ந்திருந்தான். அருகில் ஒரு பெரியவர். அவன் பார்வையிலிருந்து, இவரிடம் ஏதோ உதவி கேட்க எண்ணுகிறான் எனத் தோன்றியது பெரியவருக்கு. ஆயினும், தயக்கம் அவனைத் தடுக்கிறது எனப் புரிந்துகொண்டவர், "என்ன... ஏதேனும் உதவி தேவையா?" என்று கேட்டார்.

"ஒரு போன் செய்ய வேண்டும். உங்கள் செல்போனைத் தர இயலுமா?" என்றான்.

அவனிடமும் போன் இருப்பதை கவனித்தார் பெரியவர். 'ஒருவேளை ரீச்சார்ஜ் செய்யாமல் விட்டிருப்பானோ...' சிந்தனையுடன் தன் போனைக் கொடுத்தார். அவன் எண்களை அழுத்தினான். எதிர்முனையில் ஒரு பெண்மணியுடன் பேச ஆரம்பித்தான்.

"உங்கள் வீட்டில் வேலைக்கு ஆள் தேவை என்று கேள்விப்பட்டேன்."

"யார் சொன்னது... ஏற்கெனவே எங்களிடம் வேலையாள் இருக்கிறான்" என்றாள் அந்தப் பெண்மணி.

இளைஞன் தொடர்ந்தான் "அம்மா, உங்கள் வீட்டில் பெரிய தோட்டம் இருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். வீட்டு வேலை தவிர, தோட்ட வேலையையும் செய்கிறேன். தயவுசெய்து என்னை சேர்த்துக் கொள்ளுங்கள்."

அந்தப் பெண்மணி அவனது கோரிக்கையை ஏற்கவில்லை. இளைஞன் மேலும் சொன்னான். "அம்மா, நீங்கள் நாய் வளர்க்கிறீர்கள் என்றும் தெரியும். தினம் அதை வாக்கிங் அழைத்துப் போவது, உணவு கொடுப்பது, குளிக்கச் செய்வது என எல்லாவற்றையும் நான் செய்கிறேன்."

அதற்கும் அந்தப் பெண்மணி மசியாததால், அவன் மேலும் தொடர்ந்தான. இவ்வளவு வேலைகளையும் செய்வதற்கு, அதிகமான சம்பளம் கேட்பேன் என்று நினைக்கிறீர்களா... நிச்சயமாக இல்லை. உங்கள் வீட்டிலிருக்கும் வேலைக்காரனுக்கு எவ்வளவு சம்பளம் தருகிறீர்களோ, அதில் பாதி கொடுத்தாலே போதும். தயவு செய்து, உங்கள் வேலைக்காரனை நீக்கிவிட்டு, என்னை வேலைக்கு அமர்த்திக்கொள்ளுங்களேன்."

மறுமுனையிலிருந்த பெண்மணி, சற்று கோபமாகப் பேசினாள். "போதும் நிறுத்து. எங்கள் வேலையாளைப் பற்றி உனக்கு என்ன தெரியும்... எங்களது அதிஷ்டம், அவன் எங்களுக்குக் கிடைத்திருக்கிறான். அவனை நாங்கள் விட்டுவிடும் பேச்சே இல்லை. நீ வேறு எங்காவது வேலை தேடிக் கொள்ளலாம்'' என்று சொல்லி இணைப்பைத் துண்டித்தாள். நடந்த உரையாடல்களை கவனித்த பெரியவருக்கு, எதிர்முனையில் பேசியவர் என்னென்ன சொல்லியிருப்பார் என்று யூகிக்க முடிந்தது. அவருக்கு இந்த இளைஞனின் மீது இரக்கம் பிறந்தது.

"ஒரு வேலைக்காக இவ்வளவு மன்றாடுகிறாயே... வேலை இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறாய் என்று தோன்றுகிறது. கவலைப்படாதே. நான் கடை வைத்திருக்கிறேன். எனது கடையிலேயே உனக்கு வேலை கொடுக்கிறேன்" என்றார்.


அந்த இளைஞன் சொன்னான்... "நன்றி சார். ஆனால், எனக்கு வேலை வேண்டாம்."

பெரியவர் வியப்புடன் அவனைப் பார்த்தார். என்னப்பா சொல்கிறாய்?

"ஆமாம் சார். நான் பேசிக் கொண்டிருந்தவரின் வீட்டில் வேலை செய்யும் வேலையாள் நானேதான். எனது வேலையைப் பற்றி முதலாளி உண்மையில் என்ன நினைக்கிறார் என்று தெரிந்துகொள்ளவே உங்கள் போனை வாங்கிப் பேசினேன்.

என் வேலைமீது என் வாடிக்கையாளரான என் முதலாளி அடையும் முழு திருப்தியில்தான் எனது எதிர்காலமே அடங்கி இருக்கிறது. ஆகவேதான் இது போல அவர்களிடம் பேசினேன். இப்போது மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் தொடர்ந்து அங்கு பணியாற்றுவேன் என்றான்.

வாடிக்கையாளரின் திருப்தியே தொழிலில் முன்னேற்றத்தைத் தரும். அதுவே தொழில்முனைவோருக்கான நோக்கமாக இருக்க வேண்டும். இந்த நோக்கம் சிதைந்துபோகாமல் பார்த்துக்கொண்டால், தொழிலில் வளர்ச்சி, புதிய கிளைகள் தொடங்குவது, வருடாந்தர வருமான வளர்ச்சி போன்ற உங்களின் இலக்குகள் அனைத்தும் தாமாகவே பூர்த்தியாகிவிடும். இந்த இளைஞனுக்குத் தன் வாடிக்கையாளரான முதலாளியின் திருப்தியே நோக்கமாக அமைந்தது.






## உயிர் உள்ளவரை நிலைத்து நிற்கும் வைகாசி-18

கண்ணில் கண்டதை
நெஞ்சில் நிறைந்ததை
எண்ணம் மறக்குமா
துன்பம் நீங்குமா
துயரம் போகுமா
வாழ்ந்த இடமும்
நடந்த மண்ணும்
திறந்த படலைகளும்
பார்த்த முகங்களும்
விளையாடிய மைதானங்களும்
படித்த பாடசாலைகளும்
நல்லதைச் சொல்லித்தந்த
ஆசிரியர்களின் நினைவுகளும்
கண்முன்னே தோன்றின
என்ன செய்வது ஏதுசெய்வது
வீரம் நிறைந்த நெஞ்சங்கள்
வெஞ்சமரில் விதைக்கப்பட்டன
வெல்ல முடியாதென நினைத்தவர்கள்
கள்ளத்தனமாக வஞ்சகம் செய்து
உலகமே ஒன்றாய் நின்று
வஞ்சக வலையில் வீழ்த்தின
வெட்டிய பங்கருக்குள்
பதுங்கிய நாட்களும்
ஓட ஓட விரட்டிய
துப்பாக்கிச் சன்னங்களும்
எந்தன் நெஞ்சை விட்டகலா
நினைவுகள் தான் மறக்குமா?
அவித்த பருப்பும்
வேகாத சோறும்
அள்ளிப் போட்டதை
வயிறுதான் மறக்குமா?
ஒரு கிலோ சீனிக்காக
ஒரு சைக்கிள் கொடுத்ததும்
கடைசி நேரத்தில்
கஞ்சிக் கலைந்ததும்
சாதி பேதங்கள்
எல்லாம் மறந்ததும்
பார்ப்பவர்கள் எல்லோரும்
உறவுகளாய் தெரிந்ததும்
ஏழை பணக்காரன்
பேதங்கள் இல்லாததும்
உயிர் ஒன்றே வேண்டும்
என நினைத்ததும்
ஓட ஓட கொத்துக்கொத்தாய்
உயிர்கள் பறந்ததும்
என்றென்றும்
என் நெஞ்சம் மறக்குமா?
கையிழந்து காலிழந்து
மெய்யெலாம் புண்ணிழந்து
முள்ளிவாய்க்காலில்
முழுவதும் அழித்தனர்
கொன்று குவித்தவர்
குதூகலித்து நின்றனர்
உறவுகளை நினைக்காதே
உத்தரவு போட்டனர்
நடந்தது என்ன
அதிகாரம் நிலைக்குமா
பொங்கி எழுந்தனர்
உறவை இழந்தவர்கள்
கண்மூடித் திறப்பதற்குள்
கலைந்தது அவன் கனவு
கருவறையில் இருந்த
எம் தெய்வங்கள்
வெளிவரத் தொடங்கின
தெய்வங்கள் கண்மூடவில்லை
கருவறுக்கத் தொடங்கின
வைகாசி பதினெட்டில்
நாம் பட்ட துன்பங்கள்
அவர்களுக்கு வெற்றிக்
கொண்டாடங்கள்
வைகாசி பதினெட்டை
அவர்கள் நினைப்பார்கள்
நினைக்க வைப்பார்கள்
எம் மக்கள் இது திண்ணம்
வைகாசி பதினெட்டு
வையகம் உள்ள வரை
நிலைத்து நிற்க வேண்டும்.
அவர்கள் ஆத்மா
சாந்தியடையட்டும்
அநியாயக்காரரை
அழிக்கட்டும்
அவர்கள் சாபம்
வெற்றிக் கொண்டாட்டம்
வீழ்த்தும்
ஒரு நாள்.

குலனையூர்.பா.வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## அப்பிளும் வெள்ளரியும்

திருநெல்வேலிச் சந்தை
காலை ஏழு மணி
நடைபாதையில் இரண்டு குவியல்கள்
கள்ளிப் பெட்டியின் மேல்
அழகாக அடுக்கப்பட்டிருந்தன அப்பிள்
பக்கத்தே நிலத்தில் - சாக்கின் மேல்
குவிக்கப்பட்டிருந்தன வெள்ளரி!

புதிய சூழலை
தன் ஸ்பொன்ஜ் கண்ணறை ஊடாக
வியப்போடு பார்த்த ஒரு அப்பிள்
எந்தச் சலனமுற்றுக் கேட்டது
"நீ யார்"?

தன் ஊரில் வந்து
தளுக்கி மினுக்கிக் கொண்டு
தன்னையே யாரென்று கேட்கும்
அப்பிள் மேல் கோபம் வந்தாலும் -
இந்தக் கேள்விகளுக்குப் பழகிப் போனதால்
பொறுமையோடு பதிலளித்தது வெள்ளரி:
" நான் வெள்ளரி!"
"எங்கிருந்து வருகிறாய்?"
"சங்குவேலி!"
"எப்படி வந்து சேர்ந்தாய்?"
"மாட்டு வண்டிலில்"
"அது சரி, நீ யார்?"
வெள்ளரி கேட்டது.

"நான் அப்பிள்"
"எவடம்"
"அவுஸ்திரேலியா"
"எப்படி வந்து சேர்ந்தாய்?"
"கப்பலிலை"
பெருமையோடு சொன்னது அப்பிள்!

வெள்ளரியின் குடலையை
வியப்போடு பார்த்த அப்பிள் கேட்டது
"நீ போட்டிருக்கும் சட்டைக்கு என்னபேர்?"
"பனை ஓலை!"
அதை இளக்காரமாகப் பார்த்தது
ஸ்பொன்ஜ் இல் பொதிந்திருந்த அப்பிள்
"உன்னை எப்படிச் சாப்பிடுவதாம்?"
"பனங்கட்டியோடு!"
"அப்ப, உனக்கு இயற்கையான இனிப்பு இல்லை!"
"அப்படியல்ல, எனக்கும் பனங்கட்டிக்கும் தோது?"
"அதென்ன, பனை ஓலை, பனங்கட்டி என்று,
பனையோட ஓரே கொண்டாட்டம்?"
"பனை தான் எங்களுக்கு ஆதாரம், பாதுகாப்பு!"

மூன்றாம் நாள்
வெய்யிலின் தாக்கம் அப்பிளில்
வியாபாரி தண்ணீர் தெளித்தும் பயனில்லை
பனை ஓலைக் குடலையின் குளிர்மையில்
வெள்ளரி பத்திரமாக இருந்தது
ஒருத்தி அதை இருபது ரூபாவுக்கு வாங்கினாள்
அப்பிளை விலை குறைத்து
வியாபாரி கூவுகிறான்
வாங்க ஒருவரும் வரவில்லை
விடைபெற்றபடி வெள்ளரி சொன்னது
"இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்கியம்!"

சோ.ப

## மௌனத்தின் தேடல்-716



### யுத்தம்

போரின் கொடுமையால்
அப்பாவி உயிர்கள்
அநியாயமாய் பலியானது
அவனியில் ஒவ்வோர் இடத்திலும்
அரங்கேறிக் கொண்டு தான் இருக்கிறது

துணவியூர் நடா.

### ஊனமாய் நான்

வயல் வெளிகளோடு
வறுமையிலும்
வசந்த காலம் தான்
அந்த பொக்கிச வாழ்வு
பிணம் தின்னும்
வல்லூறாய்
மனிதம் இறந்த
கொடியோன் குண்டு வீச்சில்
என் குடியில் வீழ்ந்தது பேரிடி
துணையை இழந்து
ஊனமாய் நான்
பசியில் கதறுகிறான் மழலை
அவள் இறந்த உடலிலோ
அரிந்த மார்புகள்

சண் ஜீபத்

### அந்தோ பரிதாபம்

அப்பனின் கரங்களில்
அம்மையின் உடலம்
தாங்கிய கரங்களின் விழிகளில்
ஏக்கம்! கோபம்
குழந்தையின் கரங்கள் இரண்டும்
அச்சத்தால் உறைந்து விட்டது
அந்தோ பரிதாபம்- பாழாய்ப்போனபோர்
அப்பாவிகளை
இந்நிலைக்கு ஆளாக்கியதோ
இக்காட்சியை கண்ணுற்ற வேளை
கண்ணீர் மல்கியது
குழந்தைக்காக தந்தை வாழட்டும்
வழிகாட்டுமா உலகம்

அபி-இலம்ரலிகா,
சித்தன்கேணி.

### அடங்குமா வலிகள்

ஆண்டுகள் பல கடந்து சென்றாலும்
ஆறாது ஐயா
நாம் பட்ட யுத்தக் கொடுமைகள்
நாம் இழந்து போனது
பொன் பொருளை அல்ல
நம் உயிர் மூச்சுக்களை
எம் மூச்சடங்கினாலும்
அடங்காது ஐயா நாம் பட்ட வலிகள்

சு.சிவாஜினி.

### துயரம்

மனைவி எனும் உறவை கையில் ஏந்தி
குழந்தை எனும் பாசத்தை கூட்டிக் கொண்டு
கண்ணீர் வடித்து செல்கிறானே வறுமை மனிதா
இவன் பாசத்தையும் துயரத்தையும் அறியுமோ இந்த
நவீன உலகம்

சி.தக்சிகா,
உருத்திரபுரம் வடக்கு.

### பிரிவின் வலி

பஞ்சமா பாதகங்கள் கொஞ்சமும் குறையாது
விஞ்சிப் போனால் மிஞ்சுவது அவலம் தான்
சுதந்திரம் பிறப்புரிமையென்றாலும்
தந்திர உபாயங்களால் இழப்புக்களதிகம்
கண்களைப் போன்று காக்க வேண்டிய
சின்னஞ்சிறிதும் திகைத்து நிற்கின்றது
மானுடம் வென்றதம்மா என்று கூறிய
மகத்துவமிங்கு வரை வேண்டுமானால்
மக்கள் தான் சிந்தித்து முன்வந்து
வாக்குகளால் வாழ்வை வளமாக்க வேண்டும்


க.நாகராசா, நுணாவில்.

### தாளாண்மை

தாய்க்குப் பின் தாரம் என்றனர்
தாரத்தை இழந்த சோகத்தில் மனம் தள்ளாடுதே
துன்பங்கள் துயரங்களில் கைகொடுத்த
துணைவி
மேதினியிலே வாழ்ந்து முடிந்து மயானம்
செல்கின்றாளே
மேலோகம் போக எட்டுக் காலென்பர்
தாரத்தை இழந்த நானும் குழந்தையுடன்
தனியாக இருகைகளாலும் சுமந்து
இடுகாடு செல்கின்றேனே.
தாளாண்மை எனும் மிகுந்த மனவலியுடன்
மனதைத் தேத்த வழியின்றி
மனித நேயமில்லா உலகில் குழந்தையுடன்
சொல்லொனாத் துயரில் தவிக்கின்றேன்.

ஆ.செல்வி
திருநாவலூர்.

## மௌனத்தின் தேடல்- 717



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம், இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். / எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை




ஏனெனில் சகல நிர்வாக நடவடிக்கைகளும் அந்தக் கோட்டையிலிருந்தே பிறந்தன. இப்போது கோட்டையின் கொத்தளங்களில் திரித் துப்பாக்கி (மார்ச் லொக்) ஏந்திய மலபார் வீரர்கள் காவல் புரிந்தனர். கோட்டை அரண் சுவர்களில் பறங்கி வீரர்களுடன் காப்பிலி அடிமைகளும் காவலில் ஈடுபட்டிருந்தனர்.

கோட்டையின் கமாண்டராக வீடொர் தே பசெண்டாவும், வைஸ் கமாண்டராக கஸ்பார் பிகாறோவும் விளங்கினர். இராசவாசல் முதலியாராக நல்லூர் புவிநாயகமுதலியார் இருந்தார். அவரோடு யாழ்ப்பாண இராச்சியத்தின் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த முதலியார்களும், கச்சாய் வன்னிமையும் ஒரு நாள் கோட்டைக் கமாண்டர் வழங்கிய விருந்தொன்றில் கலந்து கொண்டனர்.

டச்சுக்காரார்/ ஒல்லாந்தர் இலங்கையில் ஆதிக்கம் பெற முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்ற சங்கதிகளைக் கமாண்டர் அனைவருக்கும் எடுத்து விபரித்தான். அவர்களை இந்த மண்ணில் காலூன்ற விடக் கூடாது அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பை அவன் கோரினான். அதற்குப் பிரதி உபகாரமாக எதையும் தருவேன் என்றான்.

அந்த விருந்தில் தான் கச்சாய் வன்னிமை தனக்கு மனைவியாக ஒரு போர்த்துக்கேயப் பெண் தேவை யெனக் கேட்டு வைத்தான். போர்த்துக்கேயக் கமாண்டர் கச்சாய் வன்னிமையை அவமானபபடுத்துவதற்காகவும், தனது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்துவற்காகவும் பறங்கிப் பெட்டைநாய் ஒன்றினை அனுப்பிவைத்தான். கச்சாய் வன்னிமை போர்த்துக்கேயரை யாழ்ப்பாண மண்ணிலிருந்து துரத்துவதாகச் சபதம் எடுத்து மன்னார் கோட்டையைக் கைப்பற்ற வந்திருந்த ஒல்லாந்த தளபதியைக் காண விரைந்து சென்றான்.

*1685*, பெப்ரவரி, *22* ஆம் திகதி. ஒல்லாந்தரின் ஆதிக்கத்தின் கீழ் கொழும்பு அடங்கியதன் பின்னரும் இரு ஆண்டுகள் வரை வட பிரதேசம் போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் விளங்கியது. போர்த்துக்கேயரின் வட ஆள்புல அதிகாரத்துக்கு ஆதாரமாக விளங்கிய பலமான மூன்று கோட்டைகள் இன்னமும் ஒல்லாந்தரால் கைப்பற்றப் படாதிருந்தன. மன்னார்க் கோட்டையின் துணை வலியோடு போர்த்துக்கேயர் மன்னார் முத்து சலாபத்தில் இன்னமும் முத்துக் குளித்தனர்.

ஊர்காவற்றுறைக் கோட்டையின் நீர்வழித் தடுப்பு முகாமின் பலம் கொண்டு, வலிமையான யாழ்ப்பாணக் கோட்டைக்கு மேலதிக பலம் சேர்த்து யானை வர்த்தகத்தில் தொடர்ந்து ஈடுபட்டனர்.(தொடரும்)

# கடல் புறா

## வணங்காத தலை! இணங்காத குரல்!




உள்ளே இரண்டாயிரத்து ஐந்நூறு பேர் வெளியே கடற்கரையில் குடிசை போட்டுத் தங்கியுள்ள இந்த ஆயிரம் கொள்ளையர் -அனைவரையும் ஒன்று கூட்டினால் பதக்குகளாகட்டும், சூளுக்களாகட்டும் என்ன செய்ய முடியும்? இங்கு தேவை ஆள் பலமல்ல. ஆள் பலம் இருக்கிறது. சரியான ஆயுதங்கள் தேவை. பயிற்சி தேவை. பயிற்சி பெற்றவர்களை நடத்தப் படைத்தலைவன் தேவை. துணிவு தேவை. எதையும் சாதிக்கப் பணம் தேவை. அது இதோ இருக்கிறது." என்று மீண்டும் பெட்டிகளைச் சுட்டிக் காட்டினான்.

மீண்டும் கூட்டத்தில் பெரும் சலசலப்பு ஏற்பட்டது. எல்லோரும் ஏக காலத்தில் பேச முற்பட்டதால் ஓரளவு குழப்பமும் ஏற்பட்டது. அந்தக் குழப்பத்தின் ஒலிகளுக்கு மேல் எழுந்தது இளையபல்லவன் குரல், "சொல்வதை அமைதியுடன் கேளுங்கள், இந்த அக்ஷயமுனைக்குக் காரணத்துடன் வந்தேன். இந்தக் கோட்டையின் பலத்தைப் பற்றியும், பலவர்மனின் திறமையைப் பற்றியும் நான் ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவே அத்தகைய ஒரு சிறந்த தளபதியின் கீழ் எனது வாழ்வை வளப்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தேன். இங்குள்ள கொள்ளையரைப் பற்றியும் கேள்விப்பட்டேன். அவர்கள் செல்வம் பறிபோவது, பூர்வகுடியால் ஏற்படும் அட்டகாசம், அதால் வருஷா வருஷம் நடக்கும் கொலைகள் அனைத்தையும் கேள்விப்பட்டேன். இங்கு கொலைகள் விழாமல் தடுத்து இந்தத் தளத்தை இங்குள்ள மக்களைக் கொண்டு பலப்படுத்த முடியுமானால் திரை கடலோடும் கொள்ளையர் படை சரியான கடற்படையாக மாற்றப்படுமானால் இங்கு செல்வமும் அமைதியும் கொழிக்கும் என்று தீமானித்தோன்.

நிலத்திலும் நீரிலும் இது ஸ்ரீவிஜயத்தின் பெரும் பாதுகாப்பாக அமையும் என்பதையும் முடிவு செய்தேன். என் எண்ணங்களை நிறைவேற்றவே இங்கு வந்தேன். முதலில் கடற்கரையில் கொள்ளையர் மத்தியில் குடிசையிட்டு உறையவும், என் மரக் கலத்தைச் செப்பனிடவும் எண்ணினேன். ஆனால் நிகழ்ச்சிகள் என் எண்ணங்களை அதிதுரிதமாக மாற்றி விட்டன. விதியின் கரங்கள் என்னை உங்கள் கோட்டைக்குள் பிடித்துத் தள்ளின.

ஆகவே நான் சம்பாதித்த முழுச் செல்வத்தை உங்கள் நலனுக்கும் இந்தக் கோட்டையின் நலனுக்கும் செலவிட முடிவு செய்தே இந்தப் பெட்டிகளை இங்கு கொண்டு வந்தேன். உங்களுக்காக இந்த ஆறு பெட்டிகளையும் பலவர்மனிடம் ஒப்படைக்கிறேன்" என்று சற்று நிறுத்திய இளையபல்லவனின் பேச்சு கூட்டத்தின் பெரும் கூச்சலில் மூழ்கியது.

கூச்சலைக் கையமர்த்தி அடக்கிய இளையபல்லவன், "ஆனால் ஒரு நிபந்தனை" என்றான். என்ன நிபந்தனை? உணர்ச்சிகளை வெளிக்குக் காட்டி முதல் முதலாகக் கோபத்துடன் கேட்டான் பலவர்மன்.

"இதோ இந்த சேந்தன் உங்கள் பொக்கிஷத்தின் அதிகாரியாயிருப்பான்" என்று இளைய பல்லவன் சேந்தனைச் சுட்டிக்காட்டினான்.

"இப்பொழுது என்னிடமுள்ள பொக்கிஷ அதிகாரிக்கென்ன?" என்றான் பலவர்மன் கோபத்துடன். "உங்கள் பொக்கிஷ அதிகாரி இது வரை பணத்தைச் சேர்த்து வந்தான். இவன் செலவிடுவான்." என்று சுட்டிக் காட்டினானான் இளையபல்லவன்.

"அவ்வளவு ஊதாரியா?" ஊதாரியா! சேந்தனா! ஒருக்காலு மில்லை. பணத்தில் மிகவும் கெட்டி. ஆனால் பூட்டி வைப்பவனல்ல. அதை உபயோகிக்கும் முறை இவனு க்குத் தெரியும். ஆயுதங்களைத் தயாரிக்கவும், கோட்டையைப் பாதுகாக்கவும் இவன் இந்தப் பணத்தை இங்குள்ள மக்களுக்கே செலவழிப்பான்."

"இளையபல்லவரே! நீர் சொல்வது விளங்குகிறது எனக்கு. உங்கள் கையாள் பொக்கிஷத்தை வசப்படுத்திக் கொள்வான், நீங்கள்.கோட்டைக் காவல் பொறுப்பை ஏற்பேன். எல்லாம் உங்கள் திட்டப் படிதான் நடக்கிறது."

"என் திட்டமா?" பலவர்மன் கேள்வி உக்கிரத்துடன் எழுந்தது."

"ஆம், உங்கள் திட்டம்தான். நடன நிகழ்ச்சியால் பதக்குகள், சூளுக்கள் பகை உங்களுக்கு ஏற்பட்டுவிட்டது. கோட்டை மக்களைக் காக்க உங்கள் வீரர்களால் முடியாது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகையால் என்னை உங்கள் வலையில் சிக்க வைக்க முயன்றீர்கள். அதற்காக ஏதும் அறியாத உங்கள் மகளையும் என்னையும் கொள்ளையருக்குச் சுட்டிக்காட்டிச் சாட்சியம் சேகரித்தீர்கள். உங்களுக்கு ஏன் அத்தனை கஷ்டம்? அத்தனை பொறுப்பையும் நானே ஏற்கிறேன். பெரும் கோட்டைகளைப் பாதுகாத்தும் எனக்குப் பழக்கம் உண்டு. தகர்த்தும் எனக்குப் பழக்கம் உண்டு" என்று பலவர்மனை நோக்கிக் கூறிய இளையபல்லவன் கொள்ளையரை "உங்களுக்குச் சமமதம்தானே?" என்று வினவினான். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

400

வலம்புரியின் மருத்துவச்சுபர்

# ஆட்டிசம் நிலைமையுடைய குழந்தைகளை எப்படி அடையாளம் காணலாம்?

**ஆட்டிசம் (Autism ) என்றால் என்ன?**

நரம்புத் தொகுதியில், முக்கியமாக மூளை விருத்தியில் ஏற்படுகின்ற அசாதாரண மாற்றத்தால் அல்லது குழப்பத்தால் உருவாகும் இந்த நிலைமை பின்வரும் அறிகுறிகளைக் கொண்டிருக்கும்,

1. பேச்சு வன்மையில் தடங்கல் அல்லது பாதிப்பு. (Impaired communication ).

2. சமூகத் தொடர்பாடலில் பாதிப்பு ( Impaired social interaction )

3. மீண்டும் மீண்டும் செய்யும் நோக்கமில்லாத உடலசைவு. (Repetitive movements)

**ஆட்டிசம் என்ற நிலைமை ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

இன்று வரை அடிப்படைக் காரணம் என்னவென்று தெரியாது.

ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

பரம்பரை அலகுகளில் வரும் மாற்றம் (Gene mutation) என்று சந்தேகிக்கப்படுகிறது.

தடுப்பூசிகள் (Vaccines) இந் நிலைமைக்கு காரணம் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

**இந்நிலைமையுடைய குழந்தைகளை சமுதாயத்தில் எப்படி அடையாளம் காணலாம்?**

குழந்தைகளுக்கு உடலில் வெளிப்படையாக எந்தப் பாதிப்பும் இருக்காது. இவர்களின் நடத்தையை உற்று நோக்குதலின் மூலம் குறைபாடுகளைப் புரிந்து கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாகப்

1. பிறரோடு கண்ணோக்கிப் பேசுவதில் சிக்கல் . இருத்தல் (Poor eye contac)

2. தன் வயதொத்தவர்களுடன் நட்புணர்வு கொள்வதிலும் சமூகத் திறன்களை வெளிக் காட்டுவதிலும் ஈடுபாடற்று இருத்தல்.

3 பிறருடன் பொருந்திச் செல்லாமல் தனித்து இருத்தல் (உணவு, விளையாட்டு போன்றன).

4. பேச்சுத் திறனற்று இருத்தல் அல்லது சொல்லியவற்றை மீண்டும் மீண்டு சொல்லுதல்

5. அன்றாட வேலைகளில் ஏற்படும் சிறு மாற்றத்தைக் கூட எதிர் கொண்டு சமாளிப்பதில் சிக்கல் இருத்தல்.

7. மீண்டும் மீண்டும் செய்யும் நோக்கமில்லாத உடலசைவுகள். (Stimming )

8: பரபரப்பான சத்தம் நிறைந்த சூழல்களில், (எடுத்து காட்டாக, விளையாடுமிடம்) மிகவும் படபடப்புடன் காணப்படுதல்.

9 சிலருக்கு சிலவகைத் துணிகள் அணிவதிலோ அல்லது தங்கள் உடல் மேல் உடை உராயும் போதோ சிரமம் ஏற்படுதல்.

**எப்படி இந்த நிலைமையைக் கண்டு பிடிப்பது? ( Diagnosis )**



இருக்கும் பல விதமான முறைகள் வினாக் கொத்தை அடிப்படையாகக் கொண்டவை.

குழந்தை நல மருத்துவர், மன நோய் மருத்துவர், மனோதத்துவ நிபுணர் கொண்ட குழு இந்த நிலைமையை இனங்காணுவர்.

இந்த நிலைமையை அடையாளம் காண சிறப்புப் பரிசோதனைகள் ( Special tests ) கிடையாது.

**தாய் கர்ப்பமாக இருக்கும் போதே கருவில் இந்த நிலைமையை கண்டு பிடிப்பதற்கு சோதனைகள் இருக்கின்றதா?**

இன்னும் இல்லை.

**எந்த வயதில் இந்த நிலைமை இனங் காணப்படுகிறது?**

இந்நிலைமையுடைய குழந்தைகளின் அடையாளங்கள் முதல் மூன்று வயதிற்குள் வெளிப்படும்.

ஆனால் பிள்ளைகளின் வளர்ச்சிப்படி நிலைகளில் ஏற்படும் கவலைக்கிடமான தாமதங்களையும் கருத்திற் கொண்டு இடையீடுகளைக் ( Interventions ) காலதாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும்.

**பிள்ளைகள் எந்த விகிதத்தில் பாதிக்கப்படுகிறார்கள்?**

அமெரிக்க நோய்க்கட்டுப்பாட்டு மையத்தின் (CDC ) 2014ஆம் ஆண்டு புள்ளி விபரத் தரவுகளின் படி 68 குழந்தைகளில் ஒரு குழந்தை நிலைமையால் பாதிக்கப்படுகிறது.

இந்நிலைமை பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளில் ஏறத்தாழ 5 மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது.

**இந்த நிலைமையை பூரணமாகக் குணப்படுத்துவதற்கு மருந்து உள்ளதா?**

இது நோயல்ல. மருந்துகளால் குணப்படுத்த முடியாதது. இது வாழ்நாள் வரையில் நீடிக்கும் நிலைமையாகும்.

ஆனால் இடையீடுகள் உள்ளது. இவ்விடையீடுகளை காலதாமதமின்றி ஆரம்பித்தால் நிலைமை கடினமாவதைத் தடுத்து இக் குழந்தைகளும் ஓரளவுக் கேனும் சாதாரண குழந்தைகள் போல் செயற்பட வாய்ப்புகள் உள்ளது.

**எந்த வயதில் இந்த இடையீடுகளைத் தொடங்க வேண்டும்?**

இடையீடுகளை காலதாமதமின்றி, நிலைமையை அடையாளம் கண்டவுடன் தொடங்க வேண்டும்.

**எப்படியான இடையீடுகள் (Interventions ) பரிந்துரைக்கப் பட்டுள்ளன?**

பின்வரும் இடையீடுகள் இக் குழந்தைகளை சமுதாயத்துடன் ஒத்து வாழ்வதற்கு உதவி செய்வதாக ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.

1. பிரயோக நடத்தைப் பகுப்பாய்வு (Applied behavior analysis).

2. தொழில் சிகிச்சைப் பயிற்சியும் உணர்ச்சி ஒருங்கிணைப்பும். (occupational therapy and sensory integration ).

3. பேச்சு சிகிச்சைப் பயிற்சி (speech therapy ).

4. உடல் சிகிச்சைப் பயிற்சி (physical therapy ).

**இப்படியான இடையீடுகளை எப்படித் தொடங்க முடியும்?**

இடையீடுகளைத் தொடங்குவதற்கு பயிற்சி பெற்ற சிகிச்சையாளர்களின் உதவியை நாடலாம்.

இதற்கு வைத்தியரின் மதிப்பீடும் பரிந்துரையும் தேவை.

**இப்படியான இடையீடுகளை எங்கு தொடங்க முடியும்?**

இந்நிலைமைக்கான சிகிச்சையை வீடுகளிலும், பாடசாலைகளிலும், "மாதவம்" போன்ற சிறப்புப் பயிற்சி நிலையங்களிலும் தொடங்கலாம், தொடரலாம்.

Dr.காவேரி சிவரூபன், MD.
Dr .சிவாணி பத்மராஜா.MD.

**மனச்சுமைகள் மடிந்துவிட**

**நிலவுமகள் உலவிவர மௌனமொழி பேச**
**குழுமிநின்ற விண்மணிகள் கண்சிமிட்டி பேசும்**
**கரைதவழும் கடலலைகள் தரைதடவிப் பேசும்**
**கருமைநிற முகில்பேசி மழைக்காற்று வீசும்**

**மகரந்தம் தேடி வண்டு மலர் மருவி பேசும்**
**மலையருவி சலசலத்து வழிநெடுக பேசும்**
**விடிகாலை துயில் எழுந்து குருவிகளும் பேசும்–எம்**
**குறுகுறுத்த விரல் அசைவில் இசைக்கருவி பேசும்**

**பேசாத பொருளுண்டோ? நீயுமெனி பேசு**
**பேச்சு எங்கள் மூச்சு என்று முரசுகொட்டிப் பேசு**
**தெளிந்தமனம் துணிந்துவர துயர்மடிந்து போக**
**திறந்தமடை வெள்ளமென மனம்திறந்து பேசு.**

சி.சிவன்சுதன்,
வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருடகால யுத்தம் இழப்புக்களே மிச்சம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா

(கொழும்பு)

போர் என்பது வெற்றியல்ல அது நாட்டினதும் அல்லது மனித குலத்தினதும் தோல்வியாகும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

30 வருட கால யுத்தம் இழப்புக்களை மாத்திரமே மிகுதியாக்கியுள்ளதுடன், வெறுப்புக்கு பதிலாக அன்பை வெளிப்படுத்துவோம் என வும் நாட்டு மக்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

30 வருடகால யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் பூர்த்தியாகின்ற நிலையில், விசேட ஊடக அறிக்கையை வெளியிட்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தாய்மார் தங்களின் பிள்ளைகளை இழந்தனர். அதே போல் பிள்ளைகள் தமது பெற்றோரை இழந்தனர். சிங்கள வர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என இன அடிப்படையில் நாம் பிளவடைந்துள்ளோம். இந்த யுத்தத்தின் காரணமாக நான் எனது கண்ணை இழந்தேன். மேலும் பல இழப்புக்களை எதிர் கொண்டேன்.

இறுதி யுத்தத்தின் முடிவை நினைவுகூரும் இன்றைய தினத்தில் (மே18) வெறுப்புக்கு பதிலாக அன்பை பகிர்வோம். பழிவாங்குவதற்கு பதிலாக மன்னிக்கவும், மனங்களில் பிசாசுகளுக்கு பதிலாக கடவுளை நிலைப்படுத்தவும் ஒருவருக் கொருவர் ஆறுதலை பரிமாற்றிக்கொள்ளவும் இன்றைய தினத்தில் உறுதியளிப்போம் என்றும் தெரிவித்துள்ளார். (நி-6)

# நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் நூற்றாண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கைதடி தெற்கு, இனுங்கித்தோட்ட அன்னை இரத்தினம் மணி மண்டபத்தில் குறித்த சங்கத் தின் தலைவர் வ. ஆறுமுக நாதன் தலைமையில் சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் முன்னிலையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல் கலைக் கழக இந்து கற்கைகள் பீடாதிபதி ச.பத்மநாபன் கலந்து கொள்ளவுள்ளார். இதன்போது நூற்றாண்டு மலர் வெளி யிடப்படவுள்ளது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 120-170 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 160 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 70-90 |
| தக்காளி | 200 | 200 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 130 | 100-130 |
| கோவா | 200 | 200 | 150 |
| கரட் | 250 | 220 | 200 |
| பூசணி | 100 | 80 | 80 |
| புடோல் | 200 | 200 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 80-100 |
| சின்ன வெங்காயம் | 280 | 320 | 200-350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 230 |
| பாகற்காய் | 450 | 450 | 300 |
| வெண்டக்காய் | 150 | 200 | 140-170 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | -- |
| பயற்றங்காய் | 650 | 600 | 500-700 |
| லீக்ஸ் | 120 | 300 | 220 |
| பீற்றூட் | 350 | 200 | 300 |
| கறிமிளகாய் | 200 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 400-800 |
| போஞ்சி | 600 | 500 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 40-70 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1200-1400 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 100 | 60-100 |
| இராசவள்ளி | 350 | 450 | 250 |
| வெங்காயப்பூ | 600 | 500 | -- |
| முள்ளங்கி | 200 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 90 |
| வல்லாரை | 60 | 40 | 70 |
| ஈரப்பலா | -- | -- | -- |

# சுகாதார சீர்கேட்டுடன் உணவகத்தை நடத்திய மூன்று உரிமையாளர்களுக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் உணவகங்களை நடத்திய உணவக உரிமையாளர் மூவரை கடுமையாக எச்சரித்த நீதிமன்றம், அவர்களுக்கு 60 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்துள்ளது.

இணுவில் பகுதிக்கான பொது சுகாதார பரிசோதகர் சி.சிவானுஜன் அப்பகுதியில் உள்ள உணவகங்களில் திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்டார்.

அதன்போது மூன்று உணவகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த நிலையில், குறித்த உணவக உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

குறித்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை தம் மீதான குற்றச்சாட்டுக்களை உரிமையாளர்கள் ஏற்றுக் கொண்டதை அடுத்து, அவர்களை கடுமையாக எச்சரித்த மன்று, 25 ஆயிரம், 15 ஆயிரம் மற்றும் 20 ஆயிரம் ரூபாய் என மூவருக்கும் 60 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. (நி-6-33).


## வேலையாட்கள் தேவை

**வெளிநாட்டு நிறுவனம்**
**(Point pedro)**

1. கணக்காளர் (5 வருட அனுபவம்)
salary - 80000/-
2. Tele Sales Executive
மும்மொழி தகவல் தொடர்பாடல் திறன்
salary - 45000/- (808)

தொடர்புகளுக்கு:
077 601 1135 / 077 703 7058

## மணமகன் தேவை

யாழ்.கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 1989 இல் பிறந்த அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு மணமகன் தேவை.

(810)

077 008 3491

## மணமகள் தேவை

யாழ். கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 1986 இல் பிறந்த தனியார் துறையில் உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. (810)

076 260 5156

## நீர்க்கசிவை தடுப்பதற்கு

உங்கள் கட்டடங்களில் மழைக்காலங்களில் ஏற்படும் நீர்க்கசிவை 10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகின்றோம்.

Finex ஸ்தாபனத்தாரின் ஏக விநியோகஸ்தர்களிடம் இருந்தும் உலகத்தரமிக்க **இரசாயனப் பொருட்களை** விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

**போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.** (808)

வடமாகாணத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தியவர்கள் 15 வருட அனுபவமுள்ளவர்கள்

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com


# இருபாலை கற்பகப்பிள்ளையார் கொடியேற்றம் இன்று

(இருபாலை)

இருபாலை கற்பகப்பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 1 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 2 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், 3 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை கொடியிறக்க வைபவம் இடம் பெறும். (நி-6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
24 - 05 - 1933



இறப்பு
17 - 05 - 2024

அமரர்.
## சீனிவாசகம் பத்மநாதன்

வரியப்புலம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் சந்தை வளவு சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு.சீனிவாசகம் பத்மநாதன் அவர்கள் 17.05.2024 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகம் மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா நாகமுத்து தம்பதிகளின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற ஈஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கந்தசாமி, ஈஸ்வரானந்தன் மற்றும் அப்புத்துரை, நாகேந்திரமூர்த்தி, இரத்தினம்மா, தவமணிதேவி, கமலாம்பிகை, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(802)

சந்தைவளவு,
சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகபுரத்தில் விபத்து இருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் நேற்று முன்தினம் மாலை இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதிய நிலையில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

புதுமுறிப்பில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்றுகொண்டிருந்த கப்ரக வாகனமும் கிளிநொச்சியிலிருந்து முழங்காவில் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் கனகபுர வீதி மாவீரர் துயிலும் இல்லத்திற்குமுன்பாக நேருக்கு நேர் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதில் ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6)

# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது





(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனின் 63 ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு அறநிதியச்சபை நடத்தும் இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் கொழும்பு லங்கா மருத்துவமனை இருதய சத்திர சிகிச்சை நிபுணரான ஞானச்சந்திரமூர்த்தி காந்திஜி, திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் ஹரிகரன் தன்வந்த் ஆகியோருக்கு இளைய தலைமுறை ஆற்றலாளருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. (நி-6-33)

# சர்வதேச பொறிமுறையிலே எமக்குத் தீர்வு வேண்டும்

## உறவுகள் வலியுறுத்து



(நெளுக்குளம்)

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு சர்வதேசபொறிமுறையில் தீர்வுபெற்றுத்தர வேண்டுமென வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கப்பிரதிநிதிகள் சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகத்திடம் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகத்திற்கும் வடகிழக்கின் எட்டுமாவட்டங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க பிரதிநிதிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவிலுள்ள தனியார் விடுதியில் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது. குறித்த சந்திப்பிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. குறித்த சந்திப்பின் பின்னர் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கப் பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு சர்வதேச பொறிமுறையில் தமக்கான நீதியைப் பெற்றுத்தர வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கையின் உள்நாட்டு ஆணைக் குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்ற உள்ளக விசாரணையில் தமக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளரிடம் எடுத்துக்கூறியுள்ளதாகத் தெரிவித்தனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு சர்வதேச நீதிபதிகளின் கண்காணிப்பில், கலப்பு நீதிமன்ற பொறிமுறையில் உள்ளக விசாரணை மூலம் நீதியைப் பெற்றுத்தருவது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை செயலாளர் யோசனையொன்றை முன் வைத்ததாகவும் இருப்பினும் தாம் அதை மறுத்ததுடன், சர்வதேச பொறிமுறையிலேயே காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு நீதி தேவை என்பதை வலியுறுத்தியதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை தற்போது தமிழர் பகுதிகளில் இடம்பெறுகின்ற நில ஆக்கிரமிப்புக்கள், பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் தொடர்பாகவும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பாதிப்பு நிலை தொடர்பிலும் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (நி-6-299)

# வாடகைக்கு எடுத்த வாகனங்களை விற்பனை செய்தவர் கைது

## வாகனங்களும் மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி கரணவாய் கிழக்கு பகுதியைச் சேர்ந்த வாகன உரிமையாளரிடம் இரண்டு வாகனங்களை வாடகைக்கு எடுத்துவிட்டு இருவேறு பகுதியில் வாகனங்களை விற்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் வாகனங்கள் இரண்டும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் கடந்த மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், வாகனத்தை வாடகைக்கு எடுத்தவரிடம் எப்போது திருப்பி தருவீர்கள் என வாகன உரிமையாளர் கேட்ட போது அந் நபர் சாக்கு போக்கு சொல்லி காலத்தை நகர்த்தியுள்ளார்.

அந்நபர் தன்னை ஏமாற்றுகிறார் என தெரிய வந்ததை யடுத்து நெல்லியடி பொலிஸில் முறைப்பாட்டினைப் பதிவு செய் திருந்தார். விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சங்கானைப் பகுதியில் விற்கப்பட்ட வாகனத்தை வாங்கிய நபரை கைது செய்ததுடன் வாகனத்தையும் மீட்டுள்ளதுடன் கொழும்பில் விற்கப்பட்ட மற்றைய வாகனத்தினையும் மீட்டு வாகனத்தை வாடகைக்கு எடுத்த நபரையும் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதன்போது சங்கானையில் விற்ற வாகனத்தை வாங்கிய நபர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் வாடகைக்கு வாங்கிய நபரை எதிர்வரும் 28 ஆம் திகதி மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-6-60)

# நெல்லியடியில் களவுபோன மோ.சைக்கிள் மீட்பு

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் 5 மாதங்களுக்கு முன் களவு போன மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் கைதான நிலையில் விளக்கமறியலில் வைப்பு.

நெல்லியடி புதிய சந்தைப்பகுதியில் வியாபாரம் செய்யும் நபரிடம் அவசர தேவைக்காக மோட்டார் சைக்கிளை கேட்டு வாங்கிக் கொண்டு சந்தேக நபர் கரணவாய் கிழக்கைச் சேர்ந்த பெண்ணொருவரையும் கூட்டிக்கொண்டு மோட்டார் சைக்கிளுடன்தலைமறைவாகியுள்ளார்.

மோட்டார் சைக்கிளை கொண்டு போய் வருவதாக சொல்லி விட்டு சென்ற நபரை காணவில்லை எனும் சந்தேகத்தில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் குறித்த வியாபாரி முறைப்பாடு பதிவு செய்தார்.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய நுவரெலியாவில் உள்ள விடுதி ஒன்றில் பணியில் ஈடுபட்ட வேளை இருவரையும் கைது செய்ததுடன் மோட்டார் சைக்கிளையும் மீட்டுள்ளனர். கைதான நபரை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய வேளை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (நி-6-60)

# படையினரால் நிர்மாணிக்கப்படும் பூங்காவிற்கு எதிராக போராட்டம்

(முறிகண்டி)

படையினரால் நிர்மாணிக்கப்படும் பூங்காவிற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் நேற்று மாலை 2.30 மணியளவில் சட்டத்தரணி சுதாஸ் தலைமையில் கிளிநொச்சி டிப்போ சந்தியில் அமைந்துள்ள இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள யுத்த வெற்றி நினைவுச்சின்னம் அமைந்துள்ள பகுதியில் இராணுவத்தினரால் சிறுவர் பூங்கா அமைக்கப்படும் நிலையில் குறித்த எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள குறித்த பகுதியை சுற்றியவாறு போராட்டத்தில் ஈடுபட்டதுடன், பிரதான வாயிலை மறித்து அமர்ந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் போராட்டத்துக்கான காரணத்தை கேட்டு அமைதிப்படுத்த முனைந்த வேளை அமைதியின்மை ஏற்பட்டதைத் தொடர்ந்து, வீதிப் போக்குவரத்துக்கு இடமளித்து போராட்டம் செய்ய பொலிஸாரால் அனுமதிக்கப்பட்டது. டிப்போ சந்தியில் அமைந்துள்ள இராணுவ வெற்றிச்சின்னம் அமைந்துள்ள வளாகத்தில் சிறுவர் பூங்கா இராணுவத்தினரால் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-100-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகள் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆதரவு

ஈழத்தமிழர்களின் தன்னாட்சி மற்றும் சுயநிர்ணய உரிமைகள் தொடர்பான சர்வஜனவாக்கெடுப்பு மற்றும் ஈழத்தில் இடம்பெற்றது இனப்படுகொலை என்பதை அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரும் தீர்மானம் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் அதனை வரவேற்றுள்ளனர்.

இந்த நிகழ்வு அமெரிக்க காங்கிரஸ் நூலகத்தில் இடம்பெற்றது.

தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் உரையாற்றியிருந்தனர்.

அத்துடன் அமெரிக்காவைச் சேர்ந்த 100க்கும் அதிகமான தமிழர்களும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 15ஆவது வருடத்தினை நினைவேந்தி வருகின்ற நிலையில் இந்த தீர்மானம் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த கோரிக்கையினை சனப்பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் வில்லே நிக்கல் அமெரிக்க காங்கிரஸில் சமர்ப்பித்திருந்தார்.

இந்த தீர்மானம் சுதந்திரத்திற்கான சர்வஜனவாக்கெடுப்பை முன்வைப்பதாகவும் இவ்வாறான அணுகுமுறை உலகின் பல பகுதிகளில் பின்பற்றப்பட்டுள்ளதாக சனப்பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் வில்லே நிக்கல் சுட்டிக்காட்டியிருந்தார்.

தங்களால் இதனை செய்ய முடியும் என்றும் தமிழர்களின் எதிர்காலத்தை அவர்களே தீர்மானிப்பதற்கு தமது பூரணமான ஒத்துழைப்பை வழங்குவதாக வில்லே நிக்கல் உறுதியளித்துள்ளார்.

தமிழர்களிற்கு எதிரான அநீதி உலகில் நீதிக்கான அச்சுறுத்தல் எனக் குறிப்பிட்ட அவர் 2009 ஆம் ஆண்டு அது இனப்படுகொலைக்கு இட்டுச்சென்றதாக சுட்டிக்காட்டினார். (ம-7,10)

# நாகப்பட்டினம் - காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை

## மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறை வரையான கப்பல் சேவை ஆரம்பிக்கும் திகதி மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக குறித்த கப்பல் சேவையை கடந்த 13 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த நிலையில், சில சட்டரீதியான அனுமதிகள் உள்ளிட்ட காரணங்களால் தாமதம் ஏற்பட்டதுடன் மே 19 வரையில் அந்த செயற்பாடு பிற்போடப்பட்ட நிலையில் தற்போது மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.

பழைய கப்பல் என்பதால் சில பாதுகாப்பு குறைபாடுகள் இருப்பதாகவும், அதனைச் சரி செய்தால் மட்டுமே உரிய அனுமதி வழங்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

டிக்கெட் முன்பதிவு செய்தவர்கள், கட்டணத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என படகுசேவையின் தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவம் அறிவித்துள்ளது.

செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளப்பெற விரும்பினால், customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொண்டு செலுத்திய கட்டணத்தினை மீளப்பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

# யுத்த வெற்றி கொண்டாட்ட நிகழ்வு இன்று பத்தரமுல்லையில்

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு இன்றுடன் 15 வருடங்கள் நிறைவடைந்துள்ளதாக தெரிவித்து இன்று பத்தரமுல்லையில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி நந்திக்கடல் பகுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர் இராணுவ வீரர்களால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து யுத்தம் நிறைவிற்கு வந்துள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த யுத்ததிற்கு தலைமை தாங்கியதுடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராக செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் 15 ஆவது தேசிய படைவீரர் தினத்தை கொண்டாடுவதற்கு இன்று பிற்பகல் பத்தரமுல்லை பாராளுமன்ற விளையாட்டரங்கில் உள்ள இராணுவ நினைவுத்தூபிக்கு முன்பாக ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

15 ஆவது தேசிய படைவீரர் தினத்தை முன்னிட்டு கடற்படையின் 3,146 சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட கடற்படையினர் அடுத்த தரத்திற்கு பதவி உயர்வு பெற்றுள்ளதுடன், 1,300 இற்கும் மேற்பட்ட இலங்கை இராணுவ வீரர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்படவுள்ளது.

அதன்படி, இன்று மாலை 4 மணிக்கு தேசிய படை வீரர் தின நிகழ்வுகள் நடைபெற உள்ளன. (ம-7,10)

# இலங்கையர்களுடன் துணை நிற்போம்

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு அமெரிக்க தூதுவர்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், அனைத்து இலங்கையர்களுடனும் அமெரிக்கா துணை நிற்பதாக ஸ்ரீலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைகளை முன்னிட்டு ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கியப்பட்ட எதிர்காலத்திற்கான உறுதியையும் நம்பிக்கையையும் பிரதிபலிக்கும் வகையில் அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கையர்களுக்கு ஆதரவளிக்குமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதி, சம உரிமைகள் மற்றும் வாய்ப்புகளுக்காக போராடுபவர்களுடன் உறுதியான பங்காளியாக அமெரிக்கா தொடர்ந்தும் இருக்குமென அவர் கூறியுள்ளார்.

அத்துடன், நிலையான சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான பன்முகத்தன்மையை உள்ளடக்கிய வளமான எதிர்காலத்தை நோக்கிய இலங்கையின் பயணத்திற்கு ஆதரவளிப்பதற்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் ஜூலிசங் தெரிவித்துள்ளார். (ம-7,10)

# கோண்டாவில் பழநி முருகன் பாமாலை இறுவெட்டு வெளியீடு

இசைக் கலைமணி லலிதா சிவபாலன் இயற்றிப் பாடிய கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப் பழநி முருகன் தெய்வீக இசைப் பாமாலை இறுவெட்டு வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் மகாதேவா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் கலந்துகொள்வார். (ம)

நம் எண்ணங்களின் பிரதிபலிப்பே செயல்களாகவும் மற்றும் வாழ்வின் அனுபவங்களாகவும் மாறுகின்றன. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# நினைவேந்தும் நீங்கள் இன்னும் ஒன்றுபடாதது ஏன்?

மே 18. எம் இனத்தின் தலைவிதியை நொந்து கொண்டதாலோ என்னவோ உறக்கம் கலைந்து போனது.

அது 2009ஆம் ஆண்டு. எங்களைக் காப்பாற்றுங்கள் என்று எங்கள் உறவுகள் உலகத்திடம் கெஞ்சியதை நினைத்தேன்.

அந்த நாடுகள் மௌனமாகப் பார்த்திருந்த அக்கிரமத்தை நினைத்துப் பார்த்தேன்.

சீ... இஃதென்ன உலகம் என்ற வெறுப்பு மனதை வதைத்துக் கொண்டது.

அண்டை நாடு நினைத்திருந்தால் கூட பல்லாயிரக்கணக்கான எம் தமிழ் உறவுகள் காப்பாற்றப்பட்டிருப்பர்.

என்ன செய்வது காப்பாற்றுவதற்கு எவருமின்றி நம் உறவுகள் துடிதுடித்து இறந்ததை நினைத்தபோது இதயம் விம்மிக் கொண்டது.

ஏன்? இப்படியொரு அவலம் நம் தமிழ் இனத்துக்கு... இந்த உறுத்தல் முட்டி மோத, கதிரவன் பின்னிரவைக் கடந்து வைகறையைத் தொட ஆயத்தமாகினான். அப்போது தான் களைத்த கண்கள் உறங்கிக் கொண்டன.

என்ன ஆச்சரியம். தூய வெள்ளை நிற ஆடை அணிந்தவர்கள் சூழ்ந்து நிற்கின்றனர். அவர்கள் நிச்சயம் சொர்க்கத்தில் இருந்து வந்தவர்களாக இருக்க வேண்டும்.

அவர்களைப் பார்த்து நீங்கள் யாவர் என வினவினேன்.

முள்ளிவாய்க்காலில் மரணித்தவர்கள் நாங்கள். எங்கள் உறவுகள் கண்ணீர்விட்டு கதறி அழுது எம்மை நினைவேந்தியதால் மௌனம் கலைந்து, அந்த அமைதியான உலகத்தில் இருந்து எம் தாயகம் வந்தோம்.

நினைவேந்தல் எங்களை நெகிழ வைத்துவிட்டது. எம் உறவுகளுடன் நாம் வாழ்ந்த அந்த நாளை நினைத்தோம். வேதனை தாள முடியவில்லை.

இறப்பு அனைவருக்கும் உரியதாயினும் எங்கள் நாட்டு அரசாங்கம் எங்களைக் கொன்று குவித்தபோது ஏன்? என்று எவரும் கேட்காதது எம்மை இன்னமும் வருத்துகிறது.

பரவாயில்லை. வாழ விரும்பிய எங்களைக் கருவறுத்த கயவர்கள் இன்னும் பட்டலைவர். அதை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம்.

ஆனால் எங்களிடம் தீராக் கவலை ஒன்று உள்ளது.

கவலையின் நெருடல் அவர்களை மௌனமாக்கியபோது, என்ன? கவலை என வினவினேன்.

அன்பனே! பல்லாயிரக்கணக்கில் நாம் உயிரிழந்தபோதிலும் தமிழ் அரசியல் தலைவர்கள் இன்னமும் ஒற்றுமைப்படாமல் கன்னை பிரிந்து நிற்பது ஏன்?

அவர்கள் உள்ளன்போடு எங்களை நினைவேந்துவார்களாயின், எமக்காகவேனும் அவர்கள் ஒன்றுபட வேண்டுமல்லவா?

அமெரிக்கத் தூதுவர் கூட, எம் அரசியல் ஒற்றுமையீனம் கண்டு கவலையடைவதாகக் கூறினாரே. அது கூட நம்மவர்களுக்கு புரியவில்லையா?

எடுத்துக் கூறுங்கள் ஒற்றுமைப்படுமாறு. என அவர்கள் ஒன்றுபட்டுக் கூறியபோது, திடுக்குற்றேன். கண்டது கனவாயினும் அது அதிகாலைப் பொழுதுக் கனவு. அர்த்தம் கொண்டது புரிந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் உயிர் எம் கைகளில்!



**இக் கட்டுரை உலக உயர் குருதி அழுத்த விழிப்புணர்வு வாரத்தையொட்டி பிரசுரிக்கப்படுகின்றது.**

உயர் குருதிஅழுத்தம் தொற்றா நோய்களிலே மிக பிரதானமான ஒன்றாகும். அண்ணளவாக இலங்கையில் மூன்றில் ஒருவருக்கு உயர் குருதி அழுத்தம் இருப்பதாக கணிப்பிடப்படுகிறது.

இந்த வாரம் உலக உயர் குருதி அழுத்த விழிப்புணர்வு வாரமாகவும் இந்த வைகாசிமாதம் குருதி அழுத்தத்தை அளவிடும் மாதமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்ற காரணத்தால் இந்தமாதத்தில் ஒவ்வொருவரும் தமது குருதி அழுத்தத்தை அளவிடுவது அவர்களது தார்மீகக் கடமையாகும்.

உயர் குருதி அழுத்தத்துடன் போராடும் மருத்துவத்துறைக்கு அதைக் கண்டுபிடிப்பதும் அதற்கு சிகிச்சையளிப்பதும் என்றுமே ஒரு சவாலாக இருந்து வருகின்றது.

உயர் குருதிஅழுத்தமே ஒருவர் தமது மூப்பிற்கு முன்னான இறப்புக்கு அதிமுக்கிய தனிக்காரணியாக கருதப்படுகின்றது. இந்தக் கொடிய உயர் குருதி அழுத்தத்தால் ஒருவருடத்தில் உலகில் ஏற்படும் இறப்புக்களின் எண்ணிக்கை 10 மில்லியன்கள் அதாவது ஒருகோடி என்றால் நம்ப முடியுமா?

இந்த இறப்புகள் உயர் குருதியழுத்தத்தால் ஏற்படும் இதயநோயினாலும் (Heart disease) மற்றும் பக்கவாதத்தினாலும் (Stroke) பெரும்பாலும் சம்பவிக்கின்றது. உயர் குருதி அழுத்தத்தை அறிந்து சிகிச்சை பெற்றால் ஒருவருடத்தில் ஒருகோடி உயிர்களை கூற்றுவனின் பிடியிலிருந்து மீட்கமுடியும்! அதுமட்டுமல்ல, ஒருவருடத்தில் சுமார் 200 மில்லியன் மக்களில் அது உண்டுபண்ணும் இதயநோய், பக்கவாதம், சிறுநீரகபாதிப்பு மற்றும் மறதி (Dementia) போன்ற வாழ்க்கையைப் பாதிக்கும் நாள்ப்பட்ட நோய்களிலிருந்தும் பாதுகாக்க முடியும்.

Covid 19 என்ற கொடியநோய் 3 வருடங்களில் முழு உலகில் வெறும் 7 மில்லியன் உயிர்களையே காவு கொண்டது. அதற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் ஏனோ இந்தக் கொடிய அரக்கனான உயர் குருதி அழுத்தத்திற்கு கொடுக்கப்படவில்லை என்பது வேதனையளிக்கிறது.

Covid 19என்ற கொடியநோய் ஏற்பட்டபோது அதைக் கண்டுபிடிக்கக்கூடிய பரிசோதனைகளோ அல்லது அதற்கு சிகிச்சையளிக்கக் கூடிய மருந்து மாத்திரைகளோ எம்மிடத்தில் இருக்கவில்லை. இருப்பினும் உலகின் வல்லரசுகளும், தனவந்த நாடுகளும், மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களும் ஒன்றிணைந்து பெருந்தொகை பணத்தைச் செலவிட்டு அந் நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன.

ஆனால் உயர் குருதியழுத்தத்தை எந்த இரத்தசோதனைகளும் இன்றி ஒரு எளிமையான கருவியினால் வீட்டில் இருந்தபடியோ அல்லது அருகிலுள்ள சுகாதாரசேவை உத்தியோகத்தரை நாடியோ கண்டுபிடிக்கக்கூடியதாக இருந்தும், அதற்குரிய மருந்துகள் மிகக்குறைந்த விலையிலும் அல்லது எந்த செலவுமின்றி தாராளமாக கிடைக்கக்கூடியதாக இருந்தும் ஏனோ இந்த அரசாங்கங்களும், சுகாதார சேவை நிறுவனங்களும் பாராமுகமாக இருப்பது இந்தநோயுடன் நாளாந்தம் போராடும் மருத்துவர்களுக்கு ஆச்சரியமாக உள்ளது. உயர் குருதி அழுத்தத்தை கண்டுபிடித்துவிட்டால் மற்ற எந்த தொற்றாநோய்களை விட இதைக் கட்டுப்படுத்துவது மிகவும் எளிமையானதாகும்.!

**பேராசிரியர் தி.குமணன்,**
**தலைவர்,**
**இலங்கை உயர் குருதி அழுத்த சம்மேளனம்.**

எனவே ஒவ்வொரு குடிமகனும் தங்களது குருதி அழுத்தத்தை தாமே தெரிந்து கொள்ள திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

இந்த கொடிய "மௌனமான கொலையாளி" என வர்ணிக்கப்படும் உயர் குருதி அழுத்தத்தைகட்டுப்படுத்தி மூப்படைய முன்னதாக ஏற்படும் பரிதாப உயிரிழப்புகளையும், இதய, சிறுநீரக, மூளை பாதிப்புக்களையும் தவிர்த்து தமக்கும், தமது குடும்பத்துக்கும், ஏன் இந்த நாட்டுக்கும் ஏற்படப் போகும் நீண்டநாள் பாதிப்புகளிலிருந்து விடுபட உறுதி பூணுவோமாக!

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3120


**சர்மிளா**





**டஜிதரன்**




**பிரசாந்**




**கீர்த்திகன்**




**துசியந்தன்**




**பவிதா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர்...

வே.பிரபாகரனின் சகோதரன் மனோகரன் குடும்பத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடந்தது.

இதில் நூற்றுக்கணக்கான ஈழத் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். (ம-7,10)

## கொழும்பு...

கொழும்பு வெள்ளவத்தையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் நடைபெற்றது.

இதேவேளை, இந்த நிகழ்வு நடைபெற்ற இடத்தில் மற்றுமொரு குழு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டது.

நிகழ்வு நடைபெற்றபோது பொலிஸாரின் பாதுகாப்புடன் எதிர்ப்பு வெளியிட்ட குழுவினர் கோஷம் எழுப்பினர்.

இதன்போது நிகழ்வினை குழப்ப முயன்ற ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சிங்கள, தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து இந்த நிகழ்வை வெள்ளவத்தை கடற்கரையில் நடத்தியபோது இந்த எதிர்ப்புகளைச் சந்தித்தனர்.

ஆனாலும் முள்ளிவாய்க்கால் நிகழ்வை திட்டமிட்டவாறு ஏற்பாட்டாளர்கள் நடத்தி முடித்தனர்.

பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் நூற்றுக்கணக்கான மக்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர். தீபமேற்றி வணக்க நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-7,10)

## போரில்...

மேற்கொண்டிருந்தனர்.

வன்னி மக்கள் ஒன்றியம் மற்றும் போரினால் உயிரிழந்த உறவுகளின் ஒருங்கிணைப்புக் குழு என்னும் அமைப்புக்களின் பெயரில் குறித்த நினைவு அஞ்சலி நிகழ்வு நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது போரால் உயிரிழந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் நினைவாக தீபம் ஏற்றப்பட்டு மக்கள் அஞ்சலி செலுத்தியதுடன் தென்னை மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ம-7,10,250)

## பொலிஸார்...

நிறுத்தினா்.

முள்ளிவாய்க்கால் தின நினைவேந்தல் நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்றுக் காலை முள்ளிவாய்க்கால் கஞ்சியைத் தயாரிக்க மாணவர்கள் தயாரானபோது அங்கு வந்த ஏறாவூர் பொலிஸாரால் அந்த நிகழ்வுக்குத் தடையேற்படுத்தப்பட்டது. முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வை ஏறாவூர் பொலிஸார் அட்டகாசத்தில் ஈடுபட்டு தடுத்து நிறுத்தினா்.

முள்ளிவாய்க்கால் கஞ்சி தயார்படுத்த வைத்திருந்த அடுப்பை காலால் உதைத்தனா். (ம-7,10)

## நீதிக்காக...

தாக சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஆக்னெஸ் காலமா்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தால் சர்வதேசம் ஒத்துழைப்பு வழங்கும் என சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம் பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவா்களை நினைவேந்தி மலா் தூவி மண்டியிட்டு அஞ்சலி செலுத்தினாா்.

அதன் பின்னா் ஊடகவியலாளா்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் பேரழிவுகள் தொடர்பான விசாரணைகள் உரிய முறையில் நடைபெறவில்லை. ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை இருப்பதாகவும் அவர் கூறினார்.

மக்களின் பிரச்சினைகளுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தெரிவித்தார். (ம-7,10)

## கண்ணீரில்...

முள்ளிவாய்க்கால் தந்த துயர வலிகளை மனங்களில் நிறுத்திக்கொண்டு உயிர் பறிக்கப்பட்ட தமது உறவுகளுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு கண்ணீர்விட்டு அழுதவாறு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

வடக்கு, கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட தாய் ஒருவர் காலை 10.30 மணியளவில் பொதுச்சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து, ஏனையவர்களும் சுடரேற்றி, அகவணக்கம் செலுத்தி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது, முள்ளிவாய்க்கால் பிரகடனமும் வெளியிடப்பட்டு, முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

இறுதி யுத்தத்தில் உயிர் நீத்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி வடக்கு, கிழக்கின் பல்வேறு பகுதிகளில் நேற்று நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஆக்னெஸ் காலமர்டும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

நினைவேந்தல் நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறீதரன் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், உயிரிழந்தவர்களின் உறவினர்களும் பங்கேற்றனர்.

நினைவேந்தலை முன்னிட்டு மல்லாவி, துணுக்காய் நகரங்களில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

மன்னாரில் நேற்றுக் காலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெற்றது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில், அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் தந்தை செல்வா உருவச்சிலை அமைந்துள்ள பகுதியில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

மலரஞ்சலியை தொடர்ந்து, முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இறுதிப்போரில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூரும் முள்ளிவாய்க்கால் 15 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கம் அதனை ஒன்றையும் விடுத்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுச்சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன.

வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரின் போராட்ட இல்லத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு நடைபெற்றது. (ம-7,10)

## புலிகள்...

15ஆவது ஆண்டு நினைவேந்தலானது நேற்று தமிழர் தாயக பகுதியெங்கும் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

அந்த வகையில், முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மண்ணில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளின் போது பல தாய்மார்கள் தங்களது வேதனையை வாய்விட்டு கதறி கண்ணீர் மல்க வெளிப்படுத்தியுள்ளனர்.

இதன்போது, தான் தன்னுடைய பிள்ளைகள் யாரும் இன்றி தனி மரமாய் நிற்பதாகவும் மற்றும் விடுதலைப் புலிகள் இருந்திருந்தால் இப்படி எல்லாம் நேர்ந்திருக்குமா என்று கண்ணீர் விட்டு கதறிய சம்பவம் பலரையும் வேதனைக்குட்படுத்தியுள்ளளது. (ம-7,10)

மஹஜன சம்பத
திகதி 2024.05.18
சீட்டிழுப்பு இலக்கம் 5479
V 2 2 1 5 9 7
அத சம்பத V 1 5 9 7
சீட்டிழுப்பு இலக்கம் 054

தன நிதானய
திகதி - 2024.05.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1509
D 01 38 42 46 D
15645

மெகா பவர்
திகதி 18/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1827
B 17 15 29 30 58
17953

லக்கி 7 VIP
திகதி 2024.05.18
சீட்டிழுப்பு இலக்கம் 305
M 9 7 0 5 4 5 M

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3721
சீட்டிழுப்பு திகதி 18.05.2024
Q 17 41 66 70
Q 02777

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.18
சீட்டிழுப்பு இலக்கம் 0788
தனுசு 34 36 37 59 தனுசு
30757 04

உத்தியோகபூர்வ முடிவுகள்
18.05.2024 வெற்றி வாரம் 187 வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து Y
3 3 9 3 3 5
37572 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,503,992.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2453 வர்ணம் நீலம் திகதி 18.05.2024 தினம் சனிக்கிழமை
30 41 44 62 Z
40030
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 89,103,693.60
DLB

சனிதா
திகதி 2024.05.18 வெற்றி வாரம் 4614 வர்ணம் இளம் பச்சை
19 35 46 70 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,217,621.60
25287
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4165 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.05.18 தினம் சனிக்கிழமை
28 34 46 54 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,404,972.00
728439
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 25 22 40 46 75
1629 சிவப்பு 18.05.2024 சனிக்கிழமை
874775
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 523,360,260.20
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2279
சீட்டிழுப்பு திகதி : 2024.05.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 114,103,164.80
08 37 68 72 O
875855
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L PHYSICS CLASS

24, 25, 26 Batch மாணவர்களுக்கு 159/1, 2nd cross st, Jaffna இலும் YMCA, Thambasiddy, Pointpedro இலும் வகுப்புகள் நடைபெறுகின்றது. 26 Batch ற்கு சனி, ஞாயிறு தினங்களில் இலவச அடிப்படை பௌதிகவியல் வகுப்பு ZOOM மூலம் பி.ப 9 - 10.20 வரை ஆரம்பமாகவுள்ளது. (770)

**Ranjit Sir - 077 600 4896**

## வேலையாட்கள் தேவை

யாழ் நகர் மத்தியில் இயங்கும் "TEEN GIRL" Fancy விற்பனை நிலையத்திற்கு முழு / பகுதி நேர வேலையாட்கள் தேவை. (771)

**075 762 2092**

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் எமது சிறுவர் இல்லங்களுக்கு கீழ் காணப்படும் வேலைகளுக்கு ஆண்/ பெண் பணியாளர்கள் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

- முகாமையாளர் - ஆண்/ பெண்
  தகைமை : ஆகக்குறைந்தது A/L 3 பாடங்களில் சித்தி
  வயது : 30 - 55
- பராமரிப்பாளர் - ஆண் /பெண்
  தகைமை - ஆகக்குறைந்தது O/L சித்தி
  வயது : 25 - 55
- சமையலாளர்
  வயது : 25 - 55

தலைவர்
செஞ்சோலை சிறுவர் அபிவிருத்தி நிலையம் (781)

**தொடர்புக்கு: 071 535 4500**

## தீபம் - யாழ் நகர்

வர்த்தகப் பிரிவு | Tamil & English Medium | A/L 2026

| | |
|---|---|
| பொருளியல் | M. லிஜிதன் |
| கணக்கீடு | V. தமிழ்ஈசன் |
| வணிகக்கல்வி | K. யதிஸ்சன் |

ஆரம்பம் 19.05.2024 சனி பிற்பகல் 3.00 மணி

அனுமதிகள் வழங்கப்படுகின்றது

பாடத் தெரிவினை மேற்கொள்ள வசதியாக மாணவர்கள் இவ் மாதம் கட்டணமின்றி இலவசமாக கல்வி கற்கலாம் (818)

077 2247781

## வீடு விற்பனைக்கு

புன்னாலைக் கட்டுவன், ஈவினையில் 17 பரப்பு, நாற்சார் வீடு 5 அறைகளுடன் கூடிய மாடி 95% வேலைகள் முடிவுற்ற வீடு விற்பனைக்கு. 125 பாக்கு மரங்கள், 40 தென்னை மரங்கள், 5 பலா மரங்கள், 10 வேப்ப மரம், 19 கமு (7 பலன் தருபவை) மரங்கள், வற்றாத 20 அடி வெட்டுக் கிணறு, பலாலி பிரதான வீதியில் ஐயனார் கோவிலில் இருந்து 1/2 Km தூரத்திலும், தெற்கே நிலாவரை பிரதான வீதியில் இருந்து 1/2 Km தூரத்திலும் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு 15 நிமிடங்களில் செல்ல முடியும். (703)

**தொடர்புகளுக்கு: 077 3409 763**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை. (757)

**077 88 62 927**

## வேலையாள் தேவை

பளையில் உள்ள தென்னந்தோட்டத்தை தங்கியிருந்து பராமரிக்க ஆள் தேவை.
வயது : 30 - 60
தனிப்பட்டவர்களுக்கு முன்னுரிமை (8)

**தொடர்பு : 075 719 0110**

## KBK - கொழும்புத்துறை

### A/L 2026 கணக்கீடு

திரு.க.பா. பாலகஜன் SLTS
B.com(JAF), H.N.Dip-in-Acc (ATI)
Dip-in-Edu(OUSL), M.com (Hons), Acc.spl

ஆரம்பம்: 22/05/2024 புதன் மாலை 04.30 மணி

A/L 2024, A/L 2025 பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றது. (742)

**077 4520 043**

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

### STUDY IN UK & WORK VISA

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

நேரடியாக வருகைதந்து இலவச ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள

வெற்றிகரமான 13 வருட சேவையில்

### WEC COLLEGE

புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம் (786)
077 64 212 64
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

## CANADA VISA

- உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
- வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
- 20 வருட அனுபவம், 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
- கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம். (511)

**021 222 5686**
**076 424 7111**
**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road, Jaffna.

## A/L தொழினுட்பப்பிரிவு

### Techna
smart thinking leads to innovate
Technical Institute

## புதிய பிரிவு ஆரம்பம்

## A/L 2026

19.05.2024(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணிக்கு

| | |
|---|---|
| உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் | |
| M.விஷ்ணு | P.நிறோஜனன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | |
| S.சக்தி | |
| பொறியியல் தொழினுட்பவியல் | |
| S.மயூரதன் | |
| ICT | கணிதம் |
| T.லவன் | T.சசிகரன் |
| விவசாய விஞ்ஞானம் | புவியியல் |
| S.சஜீபன் | S.P.கரன் |

**மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?**

- மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
- தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
- மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
- புள்ளிகளுகேற்ப Z.SCORE மூலமான தரப்படுத்தல்.
- பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
- அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
- குழு அடிப்படையிலான செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
- களப்பயணங்களை மேற்கொள்ளல்.
- இறுதிப்பரீட்சையை நோக்கிய வினைத்திறனான தயார்படுத்தல்.

தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

**077 170 3549** (762)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-0400)

### V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0400)

## A/L ICT வகுப்புக்கள் திரு.இ.குமரன்

### A/L 2026 ஆரம்பம்

சனிக்கிழமை 18.05.2024 2 pm

### A/L 2024 Repeat ஆரம்பம்

100% Practical-Oriented Class Mr.R.Kumaran-B.Sc.

Computer Lab
Study Guide
Unit Exam
Past Papers
Revision

(768) ICT துறையில் 22 வருட கற்பித்தல் அனுபவம்

MIS ICT COLLEGE TP:0776577359,#74, Sabapathy Lane, Jaffna. தலையாழி, பிரம்படி

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 259/= | Max 3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 180/= | |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 178/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 270/= | ~~330/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - 440/= | ~~480/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 1 Lux சோப் றோஸ் | - 145/= | ~~175/=~~ |
| 01 Baby Soap | - 115/= | ~~145/=~~ |
| 1 Sun பப்படம் | - 185/= | ~~210/=~~ |
| 400g Anlene அன்லீன் | - 1300/= | ~~1350/=~~ |

400g Anchor
995/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:-happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி. (816)

Happy Supermarket
**0777 8080 30**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191 பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org